Registered No M. 3.

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மக்ஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதாரவின்மேல் மதுரையில் பிரதி ஆங்கிலமீ
15உயில் பிரசுரயாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 3. | 1913ஞ ஜனவரிமீ 15உ<br>பரீதாபிஞ தைமீ 3உ | பகுதி 9. |

ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ. 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

# பொருளடக்கம்.

## (CONTENTS.)


1. பிரஹ்மஸ்ரீ டி. ஸுப்பராவ் அவர்கள்—ப. நாராயண ஐயர். ௨௬௩
A short sketch of the life ofMr. T. Subba Rao—P. N

2. ஸன்மார்க்க முறையில் ஹிதோபதேசம்—ப. நா. ௨௬௪
Instruction to Occultists—P. Narayana Iyer.

3. ஒரு ஜாதியார் முன்னுக்கு வர வேண்டியதற்கு உபாயம் — ஆத்மநாதன் ௨௬௮
Hints on social construction of a nation—Atmanathan.

4. புநர்ஜன்மம் உண்டென்பதினுண்மை—சிவராமன். ௨௭0
The Truth of Reincarnation—Sivaraman.

5. ஞாந இந்திரியங்கள் எத்தனை ?—சுப்பிரமணியன் ௨௭௪
How many are the Gnanendriyas?—Subramanian.

6. ஜீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது—பொ. முத்தையபிள்ளை ௨௭௮
Fragrance of Siva in Jiva—P. Muthiya Pillai.

7. பிறர்நலம் பயக்கும் கைங்கர்யம் புரிதலில் கவனிக்கவேண்டிய சில உண்மைகள் — ப. நா. ௨௮௧
Some Hints on Philanthropic Service—P. N.

8. துகாராம் பாவாவின் சரித்திரம்—A. சிவராவ் ௨௮௬
Life of Tukaram Baba—A. Siva Rao.

9. ஹிந்துக்களின் பூர்வ நூல்கள்—R. S. நாராயணஸ்வாமி ஐயர் ௨௯0
Ancient Hindu Literature—R. S. Narayanaswami Iyer.

10. புத்தகவரவு—பத்திராதிபர் ௨௯௫
Review of Books—Editor.

11. சமாசாரம்—பத்திராதிபர். ௨௯௬
News—Editor.

## ADVERTISEMENT.

### அறிவிப்பு.

### உயர்ந்த புத்தகங்கள்! குறைந்தவிலை!

உபநிஷத் அர்த்ததீபிகை என்னும் பெயரால் பிரசித்தம் செய்யப்பெற்ற உபநிஷத்துக்களும், சூத்திரார்த்ததீபிகை என்னும் பெயரால் வெளிவந்த வேதாந்தசூத்ரபாஷ்யம் 9 பாகங்களும், அடியிற்கண்ட குறைந்த விலைக்குச் சொற்பகாலம் விற்கப்படும். வேண்டியவர்கள் தஞ்சாவூரில் கோவிந்தன் அண்ட் பிரதர்ஸ் கம்பெனியிலிருந்தும், சென்னை தம்புசெட்டித் தெரு ரிப்பன்பிரஸ்ஸிலிருந்தும், அடியில் கையொப்பமிட்டிருக்கிறவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

### புத்தகங்களின் விவரம்.

இவைகளில் ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ்பாஷ்யங்களும் குறிப்புரைகளும் அடங்கியிருக்கின்றன.

| | முன்விலை. | இப்போதியவிலை. |
|---|---|---|
| | ரூ அ ப | ரூ அ ப |
| ஈசோபநிஷத் | 1—8 —0 | 0—8 —0 |
| கேநோபநிஷத் | 1—12—0 | 0—10—0 |
| கடம் | 4—0 —0 | 1—8 —0 |
| முண்டகம் | 2—8 —0 | 1—0 —0 |
| மாண்டூக்யம் கவுடபாதர் அவர்களுடைய காரிகையுடன் தமிழில | 3—8 —0 | 1—8 —0 |
| தைத்திரீயம் | 6—0 —0 | 2—0 —0 |
| சூத்ரார்த்ததீபிகை 9 ஸஞ்சிகை | 6—12—0 | 2—4 —0 |

தபால்சார்ஜ் பிரத்யேகம்.

அ. சிவராவ்.

ரிடையர்டு டிஸ்ட்ரிக்ட் ரிஜிஸ்ட்ரார்,
61 கீர். கச்சேரி ரோட்,
மைலாப்பூர்.

## NOTICE.

A Theosophical Book Depot has been opened at the *Hall of Theosophy*, *Madura* for sale of English and Tamil Theosophical books which are sold very cheap.

V. VENCUSAMI AIYAR,
Manager.
Theosophical Book Depot, Madura.

## புஸ்தகம், துண்டுப் பத்திரிகைகள் விளம்பரம்.

| | |
|---|---|
| ஏசுகிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல். The Imitation of Christ (in Tamil) | 1-0-0 |
| பிராசீந தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும் | 0-6-0 |
| மனிதனின் வம்சாவளியின் உண்மை | 0-4-0 |
| ஹிந்துமத தூஷணை பரிகாரம் | 0-4-0 |
| Avvayar's Yoga aphorisms in English | 0-4-0 |
| கடோபநிஷத் தமிழ்மொழிபெயர்ப்பு. | 0-3-0 |
| தைத்திரீயோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு | 0-3-0 |
| சுவேதாசுவதரோபநிஷத் ஷை | 0-3-0 |
| ஐதரேயோபநிஷத் ஷை | 0-2-0 |
| மௌநவாக்கு | 0-2-0 |
| சந்மார்க்கதீபம் | 0-2-0 |
| ஈசோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு | 0-1-0 |
| அந்நிபெஸண்டு அம்மையார் சரித்திரம் (செய்யுள்) | 0-1-0 |
| டில்லிதர்பார் மஹோத்ஸவம் | 0-1-0 |
| வெள்ளியம்பலம் என்னும் ஞாநிகளின் சங்கமும் அதனின்று வெளிவரும் ஆசாரிய புருஷர்களும் | 0-1-0 |
| வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்களின் சரித்திரச்சுருக்கம் | 0-0-6 |
| ஏசுகிறீஸ்து என்பார் சரிதம் | 0-0-6 |
| தேவாலயம் | 0-0-3 |
| தர்மசத்திரங்களும் அவைகளின் சீர்திருத்த முறைகளும் | 0-0-3 |
| இந்தியபுத்திரர்களின் சங்கம் | 0-0-3 |
| பிரஹ்மவித்யை (ஆங்கிலத்தில்) | 0-0-3 |
| சிராத்தம் | 0-0-3 |
| சன்மார்க்க சபையை நடத்தும் முறை | 0-0-3 |
| பிரஹ்மஞாந சபையின் யந்திரம் | 0-0-2 |
| பிரஹ்மவித்யை | 0-0-2 |
| அஷ்டமி பிரதக்ஷிணம் | 0-0-1 |
| பிரமஹ்ஞாந சபை | 0-0-1 |
| தாசவதாரங்களின் உண்மை | 0-0-3 |
| மஹாத்மாக்களும், அவர்களை அடையும் மார்க்கமும் | 0-0-3 |

மேற்கண்டவைகளுக்கு 100-க்கு 10 கமிஷன் கொடுக்கப்படும். தபாற் கூலி பிரத்தியேகம். வேண்டுவோர் மதுரை தியஸாபிகல் ஸொஸைட்டி பிரெஸிடெண்டு ப. நாராயணையரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.



T. SUBBA RAO.

391

# பூர்ணசந்திரோதயம்.


| தொகுதி 3. | 1913ஞ ஜனவரிமீ 15உ<br>பரீதாபிஞ தைமீ 3உ | பகுதி 9. |
|---|---|---|


## பிரஹ்மஸ்ரீ டி. ஸுப்பராவ் அவர்கள்.

1. பிரஹ்மக்ஞான சபையின் ஆரம்பத்திலிருந்த இரண்டு மணிகளில் ஒரு மணியான ஸ்ரீமாந் கே. தாமோதர மவலாங்கரைப் பற்றி முன் பிரஸ்தாபித்தோம். இப்போது மற்றவரான ஸ்ரீமாந் ஸுப்பராவ் என்பாரைப்பற்றிப் பிரஸ்தாபிப்போம். இவர் உயர்தர ஞானி, ஆங்கிலத்தில் அகன்று ஆழப்படித்த நிபுணர். மஹாமேதாவி. ஸம்ஸ்கிருதம்,தெலுங்கு இவ்விருபாஷைகளும் தம்முடைய சொந்த பாஷைகளாகையால்,இவைகளில் அதிகபாண்டித்தியம் இல்லாதவராயினும், இவைகளின் சாஸ்திர புத்தகங்கள் பழைய பாடமாகவே இவருக்குத் தோன்றின. உபநிஷத்துக்கள்,வேதாந்த சூத்திரம் முதலிய ஞான நூல்கள் இவரின் ஸ்மரணைக்கு வந்தனபோல் இருந்தன. கண்டோர் மநத்தைக் கவரும் பிரகாசமான கண்களை உடையவர். இவர்முகத்தில் எப்போதும் ஓஜஸ்ஸும் தேஜஸ்ஸும் ஜ்வலித்துக் கொண்டிருக்கும். மாதுஸ்ரீ ஹேலிநாம்பாள் அம்மை இவருடன் அத்தியந்த ஸ்நேஹம் பாராட்டினர். இவர் வேண்டுகோளின்மேல், பிரஹ்மக் ஞாநசபை, பம்பாயினின்று சென்னை ஆதிபாற்றில் ஸ்திரமாக

அமர்ந்தது. சென்னைக்கு பிரஹ்மக்ஞானசபை வருமுன்னமேயே அவர் அச்சபையின் அங்கத்தினராக ஏற்பட்டிருந்தனர். ஸ்ரீமான் ஆல்காட்டு என்பார் இவருடைய கல்வியின் திறமையைப் பற்றியும் இவருடைய விக்ஞானப் பயிற்சியைப் பற்றியும் மிகவும் ஆச்சரியப் பட்டவராய், இவர் மரண காலத்தில், அடியில் வருமாறு எழுதினர். "பால்யரான இந்த ஞானி ஒரு அற்புதமானவர். இவர் மரணம், பிரஹ்மக்ஞானக் கிளைச் சபைகள் உள்ள இடமெல்லாம் மிகவும் துக்கத்தை விளைவிக்கும். இவர் முகத்தில் ஞான ஒளி பிரகாசித்தது. வேதாந்த சாஸ்திரத்தை ஆராய்ந்து தெளிந்தவர். இவர் மரண மாயினர் எனக் கேள்விப்பட்டபோது ஞான பூமியில் ஒரு பிரகாசமான நக்ஷத்திரம் ஒளி மங்கி மறைந்தது என மதித்தேன். அவர் என்னுடைய அந்தரங்க ஸ்நேஹிதர்"

2. இவர் கோதாவரி ஜில்லாவில் ஒரு கிராமத்தில் நியோகி பிராஹ்மண ஸ்மார்த்த குலத்தில் 1856வரு ஜூலைமீ 6உ பிறந்தார். இவர் ஆறுமாதக் குழந்தையாக இருக்கும்போது, இவர் பிதா இறந்து போனர். இவர் மாமன் இவருக்குக் கல்வி கற்பித்து இவரை வளர்த்தார். அவர் பிட்டாப்பூர் ஸம்ஸ்தானத்தின் திவானுக இருந்தார். முதலில் காக்கிநாடாவிலுள்ள உயர்தர ஆங்கில பாடசாலையில் படித்து வந்தார். அப்போது இவருடைய பின் பிரகாசித்த ஸாமர்த்தியமும் ஞான மலர்ச்சியும் குப்தமாகவே இருந்தன. வெளிப்படவில்லை. மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறின பிறகு, சென்னை பிரதம கலாசாலை (Presidency College)யில் படித்து 1876வருத்தில் B.A. பரீக்ஷையில் முதல் வகுப்பில்(First in the First Class) தலைமையாகத் தேறினர். அதே வருஷத்தில் திவான் மாதவராவ் அவர்கள் இவரை பரோடா ராஜ்யத்தின் ஹைக்கோர்ட்டுக்கு ரிஜிஸ்தரார் வேலையில் நியமித்தனர். அந்த வேலையில் ஒரு வருஷம் அமர்ந்தனர். பின்பு அதை விட்டு சென்னைக்குத் திரும்பினர். 1879வருத்தில் B. L. பரீக்ஷையில் தேறினர். 1880வருத்தில் சென்னை ஹைக்கோர்ட்டில் வக்கிலாக தாக்கலாயினர். இதில் ஏராளமான வரும்படி வந்து கொண்டிருந்தது. ஆனால் இந்த உத்தியோகத்தில் இவர் மனம் பிரியப்படவில்லை.

393



3. ஞாந சாஸ்திரங்களிலேயே இவர் மநம் சென்று கொண்டிருந்தது. இவருடைய படிப்புக்கும் இவருடைய புத்தியின் உயர்வுக்கும் ஏற்ப அதிகமான புஸ்தகங்கள் எழுதி வைத்தாரில்லை. பகவத் கீதையின் பரம ரஹஸ்யத்தை ஒரு வருஷத்தின் டிசம்பர்மீ பிரஹ்மக்ஞாந மஹாசபையில் நான்கு உபந்யாஸங்கள் வாயிலாக மிகவும் அற்புதமாக வெளியிட்டனர். சில சமயங்களில் Theosophist பிரஹ்மக்ஞாந பத்திரிகைக்கு உயர் நலம் அமைந்த வியாஸங்களை எழுதியுள்ளார். இவர் எழுதியவைகளை எல்லாம் திரட்டி புத்தக ரூபமாக இப்போது வெளியிட்டிருக்கின்றனர்.

4. பிரஹ்மஸ்ரீ ஸர் எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்களைப் போன்ற அநேக புத்திமான்கள் இவருடன் ஸம்பாஷணையை நாடுவர். அது மிகவும் ஆச்சரியமாய் ஞாந முறையைப்பற்றி நிகழும். அவருடன் ஒரு நாழிகை ஸம்பாஷணை செய்தலும் ஒரு உயர்ந்த ஞாந நூல் கற்றலும் நேர் நேர் என ஸ்ரீமாந் லெட்பீடர் அவர்கள் சொல்லுகிறார்கள்.

5. அவருடன் நேரில் பேசும்படியான பாக்கியம் நானும் பெற்றேன். இதில் எழுதியிருக்கின்ற ஒவ்வொரு விஷயமும் நேரான அநுபவத்தாலும் உறுதி பெறுகின்றது. 1890ஞு ஜூன்மீ 24உ செவ்வாய்க்கிழமை இராத்திரி 10 மணிக்கு இம்மஹாந் மரணமாயினர். இவர் உடனே மறுபடியும் நம் தேசத்தில், தாம் முன் பிறந்த பிராஹ்மண குலத்திலேயே அதே ஜில்லாவில்,ஜந்மம் எடுத்திருக்கிறாரென்றும் இப்போது இவருக்கு வயது 18 என்றும், மாதுஸ்ரீ அந்நி பெஸண்டு அம்மையார் சொல்லியிருக்கிறார். உற்ற காலத்தில் பிரஹ்மக்ஞாந சபையின் முக்கியஸ்தராக, அதன் தலைமையையே வகிப்பாரென்றும் பிரஸ்தாபிக்கப்படுகிறது. அவரை நேரில் திரும்பவும் பார்க்கும் நலத்தை நாம் பெற விரும்புகின்றோம்.

ப. தா.

## ஸந்மார்க்க முறையில் ஹிதோபதேசம்.

(240-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

### ஸந்மார்க்க முறையில் சில அநுஷ்டாந விதிகள்.

11. விழித்தவுடன் படுக்கையை விட்டெழு. சோம்பலாகப் படுக்கையிற் புரளாமலும் அரை விழிப்புள்ளவனாகவும், அரைக்கனவு காண்பவனாகவும் இராமல் உடனே எழுந்திரு. பின் மனிதர்கள் எல்லாரும் ஞாநம் பெறவேண்டுமெனத் தீவ்ரமாய் ஈசுவரனைப் பிரார்த்தனை செய்வாய். ஸந்மார்க்கத்தில் பிரவேசித்து நடைபெறுகின்றவர்கள் இனி மேன்மேலும் சுகமாய்க் கிலேசங்களில்லாமல் நடைபெறவேண்டுமென்றும், இந்திரியங்களின் வசப்படாமல் அவைகளை வெல்லவேண்டுமென்றும் உன் மநத்தில் நற்சிந்தனை கொள்வாய். உன் குருதேவர் ஸமாதி அவஸரத்தில் இருப்பதாக நீ சிந்தனை செய். அவர் ஸ்வரூபத்தை உன் மநத்தில் பதியவை. மநத்தால் அவருக்கு வந்தனை வழிபாடுகள் செய். விதித்தவைகளைச் செய்யாதொழிவதாலுண்டாகும் குற்றத்தையும், நிஷேதிக்கவேண்டியவைகளைச் செய்தலாலுண்டாகும் குற்றத்தையும் மன்னிக்கவேண்டுமென மநம் உருகி அவரிடம் பிரார்த்தனை செய். இது மநஐகாக்ரியம் பெறுதலிலும் தூய்மைபெறுதலிலும் இன்னும் இவைபோன்றவைகளில் நலம்தரும். அல்லது உன்னிடமுள்ள குறைகளை ஆராய்ந்து சிந்தனை செய். அவைகளினால் உண்டாகும் சொற்பசுகத்தையும் நீடித்த தீமையையும் நன்குணர்ந்து அக்குற்றங்கள் இனிச் சம்பவியாமல் தவிர்ப்பேனென உறுதியான தீர்மானம் கொள்வாய். இவ்விதம் தன்னையே பரீக்ஷித்து வருதலால் ஸந்மார்க்கமுறையில் நீ நினையாதபடி அவ்வளவு விரைவாய் மேற்போகலாம். நீ ஸ்நாநம் பண்ணுங்கால் உன்னுடைய பாபங்களும் தீய செயல்களும் அலம்பப்படவேண்டுமென உறுதியாய் விரும்புவாய். பிறருடன் ஒழுகுவதில் அடியிற்கண்ட விதிகளைக் கவனிப்பாய்.

(1) அநாவசியமாக உன் கடமையல்லாத எக்காரியத்தையும் செய்யாதே. ஒரு காரியத்தைச் செய்யுமுன் அதை நீ செய்ய வேண்டுவதுதானாவென்று ஆராய்ந்தறி.

(2) அநாவசியமாக ஒரு வார்த்தையும் பேசாதே, பேசுமுன் உன் வார்த்தையாலேற்படும் பயனைச் சிந்தனை கொள்வாய். ஒரு கூட்டத்தில் இருக்கிறோமே என நினைத்து நீ கொண்ட மௌந நோன்பை இழக்காதே.

(3) அநாவசியமானதும் வீணானதுமான எவ்வித எண்ணமும் உன் மநத்தில் குடிகொள்ள நீ இடங்கொடாதே. இது சொல்லுதற் கெளிது; சொன்னபடி செய்தல் அரிது. ஆகையினால் முதன் முதலில் தீய எண்ணங்களையும் வீணான எண்ணங்களையும் உன் மநத்தை அணுகாமல் விலக்கு. உன் குற்றங்களை நீ ஆராய்தல் மூலமாயும் பூர்ணர்களான மஹாபுருஷர்களைத் தியாநம் பண்ணுவதாலும் அவ்விதமாய் விலக்குதல் இலகுவாம்.

(4) நீ உண்ணும்போது உன் உணவு சரியானபடி ஜீர்ணமாகி உன் ஞாநப்பயிற்சிக்கு அநுகூலமாக உன் சரீரம் அமையவேண்டுமெனவும் அவ்வுணவு விஷயநுகர்ச்சியையும் தீய எண்ணங்களையும் உண்டாக்காமல் இருக்கவேண்டுமெனவும் தீவ்ரமாய்ச் சிந்தனை கொள்வாய். பசித்து உண்ணவேண்டும். தாகித்தால் ஜலபாநம் பண்ணவேண்டும். யாதேனும் ஒரு ருசியான உணவு உன் நாக்கில் ஜலம் ஊறும்படியாகச் செய்தால் அதன் வசமாகி அதை உண்ணாதே. அதை உண்ணுவதாலேற்படும் சந்தோஷம் சில நிமிஷங்களுக்குமுன் இல்லை. சில நிமிஷங்களுக்குப் பிற்பாடும் சென்றுபோம், அது அற்பசந்தோஷம். அதிகமாக அதை உண்டால் அது துன்பமாக மாறும். அதன் சந்தோஷம் நாவிற்கு மாத்திரம் தான். அதை வேண்டுமென்று விரும்பி நீ அதன் வசமாகி விட்டாயானால் எவ்வித கீழான கார்யம் செய்வதிலும் வெட்கப்படமாட்டாய். மேலும் என்றும் சுகிர்தம்பயக்கும் ஒரு லக்ஷியத்தை விட்டு நச்வரமான விஷயத்தில் உன் மநத்தையும், காலத்தையும், சக்தியையும் செலவழித்தல் அறிவின்மையாம். நீ என்பது சரீரமன்று, இந்திரியமன்று, அதனால் சரீரமும் இந்திரியமும் வேண்டும் சுகங்களும் வேண்டாத துக்கங்களும் உண்மையில் உன்னை பாதிக்கா்வாம். இவ்விதமே விஷயநுகர்ச்சியில் உன் மநத்தை இழுக்கும் ஒவ்வொரு பதார்த்தத்தையும் அறிவால் ஆராய்ந்து விலக்குவாயாகில் நீ வெற்றி பெறுதல் ஒருதலைபாகும்.

(5) அதிகமாகப் படிக்காதே. பத்து நிமிஷம் படித்தாயானால் பத்து மணி காலம் அதை மநநம் பண்ணி சிந்தனை கொள்வாய். தனிமையாயிருத்தலை விரும்பு. உன்னுடைய எண்ணங்களையே சிந்தனை கொள்ள எகாந்தத்தை நாடு. பிறர் உனக்கு உதவி புரிவாரென நினையாதே. உன் முயற்சியால் நீ மேலேறவேண்டுமென நினை. விஷயப்பற்றுக்களைக் கொஞ்சங் கொஞ்சமாய்த் தவிர். காலையில் போல நீ படுக்குமுன் பிரார்த்தனை பண்ணுவாய். தினந்தோறும் படுக்குமுன் உன் கர்மங்களும் உன் அநுஷ்டாநங்களும் நேர்மையாய் நடைபெற்றனவாவென நடு நிலைமையினின்று வழுவாமல் அவைகளைப் பரீக்ஷை செய். அவ்விதம் பரீக்ஷிப்பதில் உன்னிடம் குற்றங்கள் இருப்பின் அவைகளை தீர்க்கமாகச் சிந்தனைகொண்டு மறுநாள் அவைகளைச் செய்யேனென உறுதியான தீர்மானங்கொள். உதாரணமாக "அவனிடம் கோபமாய்ப் பேசினோம், அப்பொய்யைச் சொன்னோமே, மநத்தில் ஒன்று வாக்கில் ஒன்றிருக்க நடந்தோமே, எழை ஒருவன் யாசிக்க அவனைக் கடிந்து துரத்தினோமே, பிறஸ்திரீயை இச்சித்தோமே, ஒருவர் ஆநந்தத்தைக் கண்டு சகியாமல் மநம் வருந்தினோமே" என்ற இவை போன்றவை.

12. ஆத்மக் ஞாநம் பெறுதலின் நோக்கம் ஆத்மாவிற்கன்று, ஞாநத்திற்காம். ஆத்ம ஞாநத்தின் பிரயோஜநம் ஞாநமே அன்றிஆத்மாவின் பிரயோஜநம் இன்றாம். ஆத்மக் ஞாநத்தைப் பெறுதலுக்கு சுத்தமான அன்பு வேண்டற்பாலது. சுத்தமான அன்பால் தூண்டப்பட்டவனாய் ஞாநத்தை நாடு. அதன் பலனாய் ஆத்மக் ஞாநம் உண்டாகும். ஞாநமுறையில் வித்தியார்த்தி பரபரப்பும் பதட்டமுமாக இருத்தல் சுய லாபத்தைக் கருதுகிறானென்றும் சுத்தமான அன்புடையனல்லன் என்றும் காட்டும். சுத்தமான அன்பிற்கு உழைப்பவர் கடைமுறையில் பெறும் உயர் நலமான வெற்றியை அடைய இவன் அருகனல்லன் எனத் தெரியவரும்.

ஸத்யம், ஞாநம், ஆநந்தம், அன்பு, பலம், நலம் இவைகள் ஸ்வரூபமாகவுள்ள ஈசன் நம் ஒவ்வொருவரிடமும் இருக்கின்றார்.

அவர் உண்மையாய் என்றும் அன்பின் வடிவினர்; மலைபோல ஸ்திரமான சிரத்தையின் நிலயம்; எல்லாம் அழிந்தாலும் நம்மைத் தவறாத பற்றாக்கோடு. நம்முடைய தீயகர்மம் தொலையும் வரை பொறுமையாய் நாடி அடையவேண்டிய பொருள். அவர் உற்ற காலத்தில் நம்முடைய ஹிருதயத்தின் கண் பிரவேசித்துத் தோன்றிடுவர். அவர் பிரவேசிக்கும் வழி சாந்தமும், ஸந்துஷ்டியுமாம். அஸந்துஷ்டன், தான் இருக்கும் நிலைமைக்குக் காரணமான தர்ம விதியுடன் அதிருப்தியுள்ளவனாவான். தர்மவிதியே ஈசுவரனாம். அதனால் விதியுடன் திருப்திகொள்ளாதவன் அவரைப் பகைத்தவனாவன். ஸ்ருஷ்டி என்ற விகாஸப் பிரவாஹத்தில் நாம் நடை பெறுகிறோமென்று உணர்ந்தால் அதில் நேரிடும் ஒவ்வொரு ஸம்பவமும் நியாயமும் நேர்மையும் உள்ளதாகத்தானே இருத்தல் வேண்டும். எண்ணிய கர்மம் தவறுதல் நமக்கு நலமாம். அதின் மூலமாய்த் தான் நாம் சாந்தம் பெறுதல் கூடுமென பகவாந் கிருஷ்ணன் உபதேசித்துள்ளார். நாம் எண்ணிய எண்ணங்களும் சங்கற்பித்த சங்கற்பங்களும் நிறைவேறுமாகில் கிலேசங்களும் தடைகளும் இல்லாமற்போம். எண்ணங்கள் பிசகாய் இருக்கலாம். அறிவின்மை பற்றியவைகளாக இருக்கலாம். இதனால் தான் அவை பூர்ணமாய் நிறைவேறுதலில் தடைகள் இருக்கவேண்டுமென்பது ஈசுவர சங்கற்பம். எண்ணம் மாத்திரம் நம்மைக் குற்றவாளியாக்காது. அதை முயன்று நிறைவேற்றினால் கர்மபந்தம் ஏற்படும். மநம் சோர்ந்து நீ தளர்ந்தாயாகில் உன் எண்ணங்களின் வலிமை குன்றும். சிறைச்சாலையில் அடைபட்டிருப்பினும் ஒருவன் ஸந்மார்க்கத்தில் நடை பெற்று நலம் பெறலாம். ஆனால் எவ்வித தீய ஸம்பவத்திலும் வெறுப்புக்கொள்ளாதே. நல்ல ஸம்பவத்தைப் போல தீயதிலும் உன் மநம் கோணாமல் திருப்தியாக இருக்குமாகில் அதனால் நீ தைர்யம் பெறுவாய். உன் மநம் நலம் பெறும். உன் சரீரமும் பலப்படும்.

(இன்னும் வரும்.)

ப. நாராயண ஐயர்.

# ஒரு ஜாதியார் முன்னுக்கு வர வேண்டியதற்கு உபாயம்.

நம் தேசத்தின் பிரகிருத நிலைமையானது எவ்விதம் இருக்கிற தென்றால், அவர் அவர் ஜாதியின் யோகக்ஷேமத்தையும், அபிவிருத்தியையும் மாத்திரம் கருதினவராய் அஜ்ஜாதியார் மாத்திரம் நலம் பெறும்படி கைங்கர்யங்கள் செய்யப் பெறுமாகில், அஜ்ஜாதியார்கள் மாத்திரம் தனிமையாக மேலான பதவியை அடைவார்கள் என மதிக்கமுடியாது. அடையமாட்டார்கள் எனவே நிச்சயமாக எண்ணலாம். பல ஜாதியார்கள், பல மதஸ்தர்கள் அவைகளின் கண்ணுள்ள பலவாறான பல ஸம்பிரதாயிகள், இவைகள் போன்ற எத்தனை வேற்றுமைகள் நம் தேசத்திலிருப்பினும், ஒரே ராஜாங்கத்தின் ஆளுகைக்குள் இருக்கின்றோமாகையால், எல்லாரும் பொது நலத்தைக் கருதியவர்களாக, பொதுவான கைங்கர்யங்களை நாடிச் செய்தலே நலமாம். வியவஸாயத் தொழில், கைத்தொழில் முயற்சி வைத்திய இலாகாவில் நலம் பெறல், சுகாதார விஷயங்கள், (Sanitary matters) கல்விப் பயிற்சி, இராஜாங்கத்தாரிடமிருந்து சுதந்தரம் பெறல் இவை போன்றவை எல்லா ஜாதியாருக்கும் பொதுவானவை. ராஜாங்க முறையில், ஹிந்துக்கள் ஸ்வாதந்தர்யம் பெற வேண்டுமென்றால், அதற்குரிய தகைமைகளை கல்விப்பயிற்சியால் ஹிந்துக்கள் மாத்திரம் பெற்றால் போதாது. மகம்மதியர்களும் உரிய தகைமைகளைப் பெற வேண்டும். அம்மாத்திரமும் போதாது. ஹிந்துக்களில் கீழானவர்களாகத் தள்ளுண்டு இருக்கின்ற தீண்டா ஜாதியார்கள் என்றவர்களும் சீர்திருத்தம் பெற்று கல்விப் பயிற்சி அடைந்து நாகரிகம் பெற்றவர்களாக அமைய வேண்டும். இந்தியாவில் இருக்கின்றவர்கள் எல்லாரையும், இந்திய விராட் புருஷன் என்ற ஒரே ஜனஸமூஹமாக, ஒரே குலமாகக் கருதவேண்டும், அவ்விதமே ஒழுக வேண்டும். எல்லாரும் அவர் அவர் சக்திக்கும் தகைமைக்கும் அநுகூலமான கல்வியைக் கற்க வேண்டும். நம் தேசத்தில் படியாதவன் ஒருவனேனும் இருக்கக் கூடாது. நம் நாட்டில் 100க்கு 90 பெயர்கள் கல்லாத மாந்தர். ஜப்பான் தேசத்தில், 100 க்கு 12 பேர் படியாதவர்கள். ஒவ்வொரு ஜாதியாரும் பல துறைகளுள்ள கல்விச் சாலைகளை உண்டு பண்ணவேண்டும்.

அப்படி உண்டுபண்ணுவதில் தங்கள் ஜாதியார்களின் குழந்தைகள் மட்டு மல்ல, பிறஜாதியார்களின் குழந்தைகளும் படிக்கும்படியான சௌகர்யங்களும் ஏற்பட்டிருக்க வேண்டும். ஒரு ஜாதியார் தர்மக் கட்டிடங்களை ஏற்படுத்தினால் எல்லா ஜாதியார்களுக்கும் உபயோகமாகும்படியாக அவைகளை ஏற்படுத்தல் வேண்டும். ஒரு ஊருணி வெட்டினாலும், ஒரு குளம் வெட்டினாலும், ஒரு கோவில் கட்டினாலும் அவ்விதமே. ஆனால், அவைகளை உபயோகப்படுத்தும் முறையில் தர்மங்களின் நலம் குன்றாமலிருக்கும்படி, சில விவஸ்தைகள், சில நிபந்தனைகள் ஏற்படுத்தலாம். ஆனால் தர்மங்களின் பலன் எல்லார்க்கும் பிரயோஜநகரமாக விருக்கவேண்டும். அதை அநுபவித்தலில் தடைகள் இருத்தல் கூடாது. ஆனால் அநுபவத்தில் ஏற்றத் தாழ்ச்சி ஏற்படும் தான். அது அவர் அவர் யோக்யதையைப் பொருத்ததாகும். கூடியவரை கீழானவர்கள் மேலானவர்களின், நாகரிகம், சீலம், சுத்த ஒழுக்கம் முதலியவைகளைச் சிறுகச் சிறுகக் கைக்கொள்ள வேண்டும். எல்லாரும் நல்லவர்களாக ஒழுக முயல வேண்டும். ஒவ்வொருவரும் பிறருக்கு யாதேனும் ஒரு நலம்பட வாழ வேண்டும். இதுவே உண்மையில், வேதத்தினுள்ள புருஷ ஸூக்தத்தின் உட்கருத்து என்று அறிஞர் சொல்லுவார்கள்.

ஆத்மநாதன்.

## நன்மொழி.

---

124. ஆலயமே காயம், அறிவே சிவலிங்கம்,
மால்அயன் அணுகாத வள்ளலுக்கு,
சீலமுள்ள அன்பே அபிஷேகம், அன்பே
நல்லர்ச்சனை, அன்பே நைவேத்நமாம்.

—வள்ளலார்.

125. உரையற்ற தொன்றை யுரைசெய்யு மூடர்காள்,
கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ?
திரையற்ற நீர்போற் சிந்தை தெளிவார்க்குப்
புரையற் றிருந்தனன் புரிசடை யோனே.

—திருமந்திரம்.

## புநர்ஜந்மம் உண்டென்பதினுண்மை. *

1. புநர்ஜந்மம் உண்டென்பதை ஒத்துக்கொண்டாலல்லாமல் உலகவாழ்வையும் ஜீவன் நித்யத்வம் பெறுதலையும் நியாயத்திற்கும் புத்திக்கும் பொருத்தமாய் அங்கீகரிக்க முடியாது. உயர்வு தாழ்வு என்ற பல படிகளில் மனிதர்கள் பிறக்கிறதில் எல்லாரும் மேற்படி ஏறுகிறதற்கு அநுகூலமாய் ஒரே மாதிரியான சௌகர்யங்களும், சாதகங்களும் இருக்கவேண்டும் என சில புத்திமான்கள் அடிக்கடி வற்புறுத்திச் சொல்லுகிறார்கள். வித்தியாஸமான சௌகர்யங்கள் ஏற்படுகிற காரணத்தினால் மாத்திரம் ஏற்றத்தாழ்ச்சியான பல அந்தஸ்துகள் ஜந ஸமூஹத்தில் நேரிடுகின்றனவென நாம் சொல்லமுடியாது. அறிவில் பல படிகளில் உள்ளவர்களுக்கு ஒரே மாதிரியான சௌகர்யங்கள் அல்லது சாதகங்கள் ஏற்படும் பக்ஷத்தில், ஒரே மாதிரியான சுகிர்தத்தை அவர்கள் எல்லாரும் பெறுகிறார்களில்லையென நாம் அநுபவத்தில் அறிகிறோம். தமக்கேற்பட்டுள்ள சௌகர்யங்கள் அல்லது சாதகங்களை நன்கு ஆராய்ந்து அவைகளால் ஏற்படக்கூடிய பலனை அடையாமல் அநேகர் கை நழுவ விடுகிறார்கள். எத்தனைவிதமான அசௌகர்யங்களும் அசந்தர்ப்பங்களுமிருந்தாலும் அவைகளை மேற்கொண்டு எத்தனையோ பெயர்கள் ஜயம் பெறுகிறார்கள். உண்மையில் உலகத்தில் இருக்கிற முறைப்பாடெல்லாம், எல்லாருக்கும் ஒரே மாதிரியான சௌகர்யங்கள் ஏற்படவில்லையென்பதன்று. ஆனால் மனிதர்சளுடைய அறிவும் திறமையும் ஒரே மாதிரியாக இல்லாமல் பல படிகளில் இருக்கின்றனவென்பதுதான் உண்மையான முறைப்பாடு. ஒருவன் புத்திசாலி, சுறுசுறுப்புள்ளவன்; ஒருவன் அறிவிலி, சோம்பலாளி; ஒருவன் ஞாநி; ஒருவன் தீயவன், கொலைக்கஞ்சாதவன்; ஒருவன் திடசரீரமுள்ளவன்; ஒருவன் வியாதிஸ்தன்; ஒருவன் எல்லா அங்கங்களும் நேர்மையாயுள்ளவன்; ஒருவன் அங்கஹீநன்; ஒருவன் ஏழை; ஒருவன் பணக்காரன் இவ்விதமாக பல நிலைமைகளில் மனிதர்சள் பிறப்பானேன்? வயது வித்தியாஸத்தினால் இவ்வித ஏற்றத்தாழ்வுகள் இருக்குமாகில் சரியான வயதுவர இம்மேடு பள்ளங்கள் நிரவி, எல்லாரும் ஸமநிலை பெறுவார்கள். ஆனால் இவ்வித மேடுபள்ளங்கள் வயது வித்தியாஸத்தால் மாத்திரம் ஏற்படவில்லை. ஒவ்வொரு மனிதனுடையவாழ்வு

* Adapted from an article by A. B. in Bibby's Annual of 1912.

ஒவ்வொரு ஜந்மத்தில் துவக்கி, இவ்வொரே ஜந்மத்துடன் முடிவு பெறுமாகில் இத்தனை விதமான பல படித்திறங்களில் பிறப்பதற்குப் போதுமான ஸமாதாநம் இல்லை. உலகத்தில் நீதி இல்லையென்றே சொல்லலாம்.

2. பிறக்கும்பொழுதே பல வித்தியாஸங்களுடன் மனிதர்கள் ஏன் பிறக்கின்றார்கள்? ஈசுவர ஸ்ருஷ்டி அவ்விதம் நிகழ்கின்றதெனக் கூறுவோமானால், ஈசுவரனிடத்தில் அநீதியை ஆரோபிக்கவேண்டும் அன்றோ? ஈசுவரனை பக்ஷபாதமுள்ளராவக நினைக்கவேண்டும் அன்றோ? இவ்விதம் ஏற்றத்தாழ்வுள்ள பல அந்தஸ்துக்களில் ஏற்படும் பிறப்பு ஈசுவர ஸ்ருஷ்டியல்ல, ஆனால் அவரவர் பெற்றோர்களின் மநம் சரீரம் இவைகளின் வித்தியாஸங்களால் இப்பிறப்பு வித்தியாஸங்கள் ஏற்படுகின்றனவெனச் சிலர் மதிக்கலாம். இதுவும் சரியன்று. அப்பெற்றோர்களுக்குள் வந்திருக்கிற வித்தியாஸங்கள் எவ்வண்ணம் உண்டானவையோ? இஃது அநவஸ்தா தோஷம் என்னும் குற்றத்துக்கு உட்படும். மேலும் நற்குணங்களும் புத்தியின் உயர்நலமும் பெற்றோர்களிடமிருந்து சந்ததிகளுக்கு இறங்குகின்றனவல்லவென அறிஞர் ஆராய்ச்சியால் வித்தாந்தம் பெற்றிருக்கிறது. அறிஞர்கள், புத்திசாலிகள் இவர்களின் சந்ததிகள் இவர்களைவிட அதிக புத்தித் திறமையுள்ளவர்களாக விருப்பதை நாம் கண்டிலம். மேலும் எவ்வளவுக்கெவ்வளவு அதிக புத்திமான்களாக விருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் சந்ததி க்ஷீணித்துவருகிறது என்று நாமறிவோம். பேரறிவாளர் சந்ததியிலர் என்பது சித்தாந்தம். எவ்வளவுக்கெவ்வளவு அறிவில் கீழானவர்களாகவும் ஜீவராசிகளில் கீழானவைகளாகவுமிருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு சந்ததிகள் ஏராளமாய் உண்டாகின்றன. இது உலகப்ரஸித்தமானது. மஹாஞாநிகள், மஹாகவிகள், மஹாவித்வாங்கள் உலகில் பலர் இருந்துள்ளார். அவர்களின் சந்ததிகள் அவர்களைவிட மேம்பாடுடையராக இருந்திருக்கவில்லை.

3. ஜீவாத்மாவுக்கு புநர் ஜந்மம் உண்டு என்பதை நாம் அங்கீகரிப்போமானால், மேற்கூறிய ஆக்ஷேபங்கள் அற்றுப்போம். ஜீவன் ஒரு ஜந்மத்தில்தான் பெறும் குணாதிசயங்களையும் அறிவின்

பயிற்சியால் எற்படும் திறலையும் வேறு ஜந்மத்தில் வேறு சரீரமெடுக்குங்கால், தன்னுடன் கொண்டு போகிறான். அவ்விதமே அடுத்தடுத்து ஜந்மாந்தரங்கள் தோறும் முன் வினைப் பயனான குணாதிசயங்களை மேன் மேலும் எற்படும் ஜந்மாந்தரங்களில் கூடவே கொண்டு போகிறான். ஒரு ஜந்மத்தில் ஸிஸரோ (Cicero) வாக இத்தாலியா தேசத்திலிருந்தவர் தற்காலத்தில் கிளாஸ்ட்டனாக(Gladstone)வும் இங்கிலாந்தில் ஆல்ப்ரெட் (Alfred) அரசனாக இருந்தவரே நமது காருண்ணியரான விக்டோரியா (Victoria) மஹாராணியராகவும் கார்த்தேஜ் (Carthage) நாட்டைச் சேர்ந்த போர் வீரரான ஹனிபல் (Hannibal) என்பார், பேர்போன நெப்போலியனாகவும் அவதரித்தார்களென சூக்ஷ்மபூமிகளை ஆராய்ச்சி செய்கின்ற முறையில் கண்டு பிடித்திருக்கின்றார்கள். உயர்வான மதிநலம் (Genius) அவரவர் உடைமை. பலஜந்மாந்தரங்களில் ஒருவன் செய்யும்முயற்சிகளின் பயனும். பெற்றோரிடமிருந்து சரீரத்வந்த்வத்தால் பெற்றதன்று.

அவரவர் தம தம தறிவறி வகை வகை
அவரவ ரிறையவ ரெனவடி யடைவர்கள்
அவரவ ரிறையவர் குறைவில ரிறையவர்
அவரவர் விதிவழி யடையநின் றனரே—நம்மாழ்வார்

என்ற பாசுரம் இங்கு ஆழ்ந்து கவனிக்கத் தக்கது.

(4) இரக்கம், மநநெகிழ்ச்சி, அன்பு, மெலியாரை ஆதரித்தல், தியாக ரூபமான இவைபோன்ற நற்குணங்களும் சீலங்களும் ஒருவனிடம் அமைந்திருக்கின்றமை, புநர் ஜந்மம் உண்டென்பதைச் சித்தாந்தப் படுத்தும் முறையில் ஒரு ஸாக்ஷ்யமாம். புநர் ஜந்மம் என்ற தர்மம் இல்லை எனும் பக்ஷத்தில் இக்குணங்களுடையவனுக்கு இக்குணங்கள் நலம் செய்யாமலிருப்பதுடன், உலகவாழ்வில் நிகழும் போராட்டத்தில் (Struggle for existence) நஷ்டகரமானவைகளாகவு மிருக்கின்றன. இவை பொது ஜநஸமூஹத்திற்கு நலம் பயக்கும் தன்மையனவாம். தன் உயிரைக் கொடுத்தாவது, தாய்ப் பக்ஷி தன் குஞ்சுகளைக் காப்பாற்றுகிறது. தன் உயிரைக் கொடுத்தாவது வைத்தியன் நோயாளியைக் காப்பாற்றுகிறான். தாயாரைக் காப்பாற்றும் பொருட்டு புத்திரன் விவாஹம் செய்யாதொழிகிறான்.

ஈரமுள்ள நெஞ்சத்தினன் ஏழையாகவே இருப்பான். ஆகவே இத்தன்மையான நலமுள்ள குணங்களையுடையவர் சரீரம் போனதின் மேல் வேறு சரீரம் எடுக்கிறதில்லை யென்றால் இக்குணங்களால் அவர் பெறும் பயனென்ன? விகாஸ முறையில் அவர் பெறும் விருத்தி அம்சம் என்ன? கீழ்நாட்டு ஞாநியார் ஒருவர் சொல்லியபடி (Huxley) ஹக்ஸிலி என்பாரும் அதை ஆதரித்து பின் வருமாறு சொல்லியிருக்கின்றார். "உலக வாழ்வில் போராட்டம் என்பது ஸ்தூல அபிவிருத்தி முறையில் தர்மமாக நிகழ்கின்றது. அதன் பயனாக மிருகத்தன்மையான அபிவிருத்தி தான் ஏற்படுவதாகும்." இது "வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனும் பெரு வழக்காம்." மேற்கண்ட தர்மம் ஜீவன் மிருக சரீரம் பெற்று அதில் அபிவிருத்தி யடையும் முறையில் நிகழும் தர்மமாம். ஜீவன் ஆருயிர் எனப்படும். மனித சரீரம் பெற்று விகாஸ முறையில் படியேறுகையில் தியாகம் என்பதே தர்மமாம். அதனால் மனித விகாஸ முறையில் புநர்ஜந்மமென்பது முக்கியமான தர்மமாக அமையவேண்டும், அமைந்துள்ளது. "அன்போடியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு என்போடியைந்த தொடர்பு" என்ற நாயனார் குறள் இங்கு கவனிக்கத்தக்கது. இதில் வழக்கு ஆருயிர் என்ற பதங்கள் முக்கியமானவை. பெறுதற்கரிய மானிட சரீரம் பெறுதல், அன்போடு தியாகத்தோடு பொருந்துதற்கு வந்தநெறியின் (விகாஸமுறையின்) பயனென்று சொல்லுவர் ஆன்றோர். அன்பு என்றால், தியாகத்தின் ஒரு ஸ்வரூபம். தியாகமே ஸ்வரூபமாய் அவதரித்த கிறிஸ்து, புத்தர், சங்கரர், ஸ்ரீராமாநுஜர் முதலிய மஹாத்மாக்கள் புநர் ஜநமம் உண்டெனும் சித்தாந்தத்தை உறுதிப்படுத்துகின்றார்கள். எத்தனையோ ஜந்மாந்தரங்களின் பயனாய், எத்தனையோ அண்டங்களில் நடை பெற்ற விகாஸ அபிவிருத்தி முறையின் கனியாய் இம்மஹா புருஷர்கள் உண்டாயிருக்கிறார்கள் என நாம் மதிக்கவேண்டும். மேலும் அவ்வுண்ணம் அம்மஹா புருஷர்கள் உயர்வற உயர் நலம் பெற்றிருக்கிறார்கள் என நாம் சிந்தித்தால் நாம் கடைத்தேற இடமுண்டு. அவர்கள் நிற்கின்ற கம்பீரமான பதவி நமக்கும் பின் ஒரு காலத்தில் லபிக்கும் என்ற நம்பிக்கையுண்டு. கீழ் நாட்டிலும மேல் நாட்டிலும் உள்ள அறிஞர்கள் எல்லாரும் புநர் ஜந்மம் உண்டு என்ற தர்மத்தை அங்கீகரித்தே வாழ் நாளைக் கழித்திருக்கின்றனர் மநத்திற்கு சுகிர்தத்தையும் ஆறுதலையும் தேறுதலையும் கொடுக்கும் உயர்தர சித்தாந்தம் இது. யாவரும் இதைக் கைக்கொண்டு சுகிர்தம் பெறுவார்களாக.

சிவராமன்.

## ஞான இந்திரியங்கள் எத்தனை?

ஸாதாரணமாய் ஞான இந்திரியங்கள் ஐந்து என நினைக்கிறோம். சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தங்களை அறிய, முறையே, காது த்வக், கண், நாக்கு, நாஸி என்ற ஐந்து இந்திரியங்கள் பிரஸித்தமானவை. ஸ்பரிசம் என்பது மிருதுவானது, கெட்டியானது, கரடுமுரடானது இவை போன்ற விஷயங்களை மாத்திரம் அறிவிக்குமென்றும், பல திறத்ததான சீதோஷ்ண நிலைமையை அறிவிக்க இயலாதென்றும், அந்நிலைமையை அறிவிக்குமாறு, பிரத்தியேகமான வேறு சில வெள்ளை நரம்புகள் (Nerves) நம்முடைய சரீரத்தில் அமைக்கப்பெற்றிருக்கின்றனவென்றும் சில உடற் கூறு சாஸ்திரிகள் (Physiologists) சொல்லுகின்றார்கள். சீதோஷ்ணத்தை அறியும் தகைமை அவரவர்கட்கு வித்தியாஸப்படுகிறது. ஆகவே, சீதோஷ்ண நிலைமையை அறியும் இந்திரியத்தை (Sense of temperature) ச்சேர்த்து ஆறு இந்திரியங்கள் உள்ளனவெனக் கருதவேண்டுமென சிலர் மதிக்கிறார்கள். குளிரால் மேல் சர்மம் சுருங்குகிறதையும், அதன் உணர்ச்சி ஏற்படுகிறதையும் அறிகிறோம். மற்றும் சிலர் ஸ்பரிசம் என்றதனுள், நீளம், அகலம், தூரம் முதலிய விஷயங்கள் அடங்கவில்லை என்றும், அவைகளை அறிதலுக்கு பிரத்தியேகமாக ஒரு இந்திரியம் இருக்கவேண்டுவது, இருக்கிறதென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். அதற்கு (Sense of Muscularity) சதையின் களைப்பு அறியும் இந்திரியமெனப் பெயரிட்டிருக்கிறார்கள். மேலும் இந்த இந்திரியம் பிறக்கும் காலத்தில் குப்தமாக இருக்கிறதென்றும் பின்பு வரவர அநுபவத்தால் விருத்தி அடைகிறதென்றும் சொல்லுகிறார்கள். சரீரத்தின் எல்லாச்சலனத்திற்கும் சதையின் பலம் வேண்டும். சதை அதிக வேலையால் களைத்தலும் சோர்வடைதலும் உண்டு. அச்சோர்வடைதலை நாம் அநுபவத்தால் அளவைப்படுத்துகிறோம். ஒரு மைல் நடந்தால் இவ்வளவு களைப்பு, இரண்டு மைல் நடந்தால் இவ்வளவு களைப்பு இப்படியே, தூரத்தின் அளவையை நாம் அறிகிறோம். இப்படி அறிதலில், மற்ற இந்திரியங்களும், முக்யமாக கர்ணேந்திரியமும் நேத்திர இந்திரியமும் உதவிபுரிகின்றன. தூரத்திலுண்டாகும் சப்தமும், தோன்றும் தோற்றமும் முறையே மந்தமாயும் மங்கலாயும், சமீபத்திலுண்டாகும் சப்தமும் தோன்றும் தோற்றமும் தெளிவாயும் இருக்கின்ற

மையினால், தூரம் சமீபம் என்ற அறிவு பெறுதலுக்கு இவ்விந்திரியங்கள் உதவி புரிகின்றன. ஒருவன் கண்ணில் சதை வளர்ந்து கண்மூடப் பெற்று பிறவிக்குருடனாய்ப்பிறந்தான், ரூபங்கள் வர்ணங்கள் ஒன்றையும் அறியான். தன் நடையால் தூரம் சமீபம் என்பனவைகளை அறிவான். பின்பு வைத்தியத்தினால் கண்ணை மூடிக் கொண்டிருந்த சதையைப் பெயர்த்து விலக்கிவிடவே, கண் சுத்தமாயிற்று ரூபங்களை அறிந்தான். சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் எதிரிலுள்ள விஷயங்கள் எல்லாம் ஒரே தூரத்திலிருப்பனவாக அவன் அறிந்தான். சந்திரனையும் சூரியனையும் எட்டிப்பிடிப்பான் போலமுயலுவான். இந்த விஷயத்தைக் குழந்தைகளிடம் காணலாம். அவைகளுக்கு தூரம், சமீபம் என்ற பிரக்ஞை நாளடைவில்தான் உண்டாகும். எந்த வஸ்துவைக் காட்டினாலும் அதை எட்டிப்பிடிக்க முயலும். தூரவஸ்து, சமீபவஸ்து, இவைகளுக்குள்ளிருக்கும் தாரதம்மியத்தை, மங்கலாயிருத்தல், தெளிவாயிருத்தல் என்ற பேதங்கள் மூலமாய் அநுபவத்தால் தான் அறியக்கூடும். ஆகவே சீதோஷ்ணத்தை அறியும் இந்திரியம், தூரம் சமீபம் என்பவைகளை அறியும் இந்திரியம், ஆக இவை இரண்டையும் சேர்த்து ஏழு இந்திரியங்கள் பிரகிருதத்தில் அதாவது இப்போது நாம் நடைபெறும் விகாஸ நிலை .(stage of evolution) யில் உள்ளனவென்று அறிஞர் மதிக்கின்றார்கள். பிரகிருதமனித வர்க்கம் ஐந்தாம் மனிதவர்க்கமாம். "வஞஜநா:" என்று நம்முடைய புராணங்கள் சொல்லுகின்றன. இனி உலகில் தோன்றப்போகின்ற ஆறுவது, ஏழாவது மனிதவர்க்கத்தினர்களுக்கு, சூக்ஷ்ம திவ்ய திருஷ்டியும், திவ்ய சிரவணசக்தி முதலியவைகளும், இன்னும் அநேக தெய்வ சம்பத்துக்களும் உண்டாகப் போகின்றன என்பதாக நம்முடைய சாஸ்திரங்கள் கூறுகின்றன.

சுப்பிரமணியன்.

# “ஜீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது”.

“பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல உணர்ந்தறி வாளர்க்கு
நாவி யணைந்த நடுதறி யாமே”—திருமந்திரம்.

## I

இதன் கருத்து, பூவினிடத்து மணம் பொருந்துவது போல ஜீவனுக்குள்ளே சிவத்தினது மணம் பூத்தது என்பதாம்.* பூத்ததெனினும் விரிந்ததெனினு மொக்கும்.

இனி ஜீவன் யாது? சிவம் யாது? அச்சிவத்தின் மணமாவது யாது? அம்மணம் ஜீவனுள் பூத்த தெவ்வாறு? என இவ்விஷயத்தை நான்கு வகையாய்ப் பிரித்து ஆராய்வோம்.

ஜீவன்:—உடல் தோறும் நான் என்னும் சொல்லிற்குப் பொருளாய் உள்ளது ஜீவன். இது அறிவுடைப் பொருளாம். அவ்வறிவு யாதேனுமொரு துணையைக் கொண்டு தொழிற்படும். எது போலெனின், கண்ணொளி சூரியன் முதலிய பிற வொளிகளின் துணையைக் கொண்டு காண்பது போல. உடலில் எந்தப் பாகத்திலின்ப துன்பங்கட்கான செயல் நிகழினும் மநத்தின் வழியாக அறிவதாலும், தூரத்திலுள்ள காணப்படும் பொருளைக் கண்வழியாகவும், காணப்படாத பொருளை மநத்தின் வழியாகவும், ஓசையைக் காதின் வழியாகவு மறிவதாலும், அங்ஙனம் அறியுங் காலு மொன்றை யறியுங்காற் பிறி தொன்றனை யறியாமையாலும் ஜீவனைப் பற்றிக் கூறுமிடமெல்லாம் ஏகதேச வியாபக முடையது, சிற்றறிவுடையது, சிறு தொழிலுடையது என நூல்கள் கூறும். ஜீவனாலறியப்படும் உலகப் பொருள் அறிவில்லாத ஜடம், ஆதலால் தானே வந்து கூடாது. அப் பொருள்களை அறிவுடைப் பொருளாகிய ஜீவன் சிற்றறிவுடையனாதலின் தானே அறிந் தெடுத்துக் கொள்ள மாட்டாது. ஆதலால் ஜீவனையு முலகப் பொருளையுங் கூட்டுவிப்பதற்கு அவ்விரு பொருள்களின் வேறுமொரு பொருள் வேண்டப்படும். அதுவே சிவம்.

---

* இது சைவ ஸித்தாந்த பரமாக அர்த்தம் செய்யப்பட்டுள்ளது. அத்வைத பரமாக இதற்கு அர்த்தம் செய்தால் சிவம் ஆகிய மணம் என்று பொருள் கொள்ளவேண்டும். பத்திராதிபர்.

2. சிவம்:—உலகம் பலபட விரிந்திருத்தலாலும் அவ்வுலக முழுவதும் ஜீவர்கள் (உயிர்கள்) நிறைந்திருத்தலாலும் இவ்விரு பொருள்களையும் கூட்டுவிப்பதற்கு இவ்விரு பொருள்களினுங் கலந்திருந்தாலன்றி முடியாதாதலின் பூர்ண வியாபக முடைய அறிவுடைப் பொருளை அவ்வாறு கூட்டுவிக்கும். அதுவே சிவமாம்.

3. மணம்:—பிருதிவியின் (மண்ணின்) குணமே மணம். அக் குணம் மண்ணில் வியாப்பியமாய் (அடங்கி) இருக்கின்ற எல்லாப் பொருள்களினிடத்தும் நிறைந்திருக்கும். அதாவது கிழங்கு, கொடி, இலை, பூ, காய், கனி, நெல், கடலை, துவரை முதலிய எவற்றினும் நிறைந்திருக்கும். இதனை ஒவ்வொரு பொருளினு மொவ்வொரு வித வாஸனையிருப்பது கொண்டறியத்தக்கது. இவ்வாறு மணமெல்லாப் பொருள்களிடத்து நிறைந்திருப்பினு மலரிடத்துச் சிறப்பாக விளங்கும். மணத்தை மலரின் குண மென்னலாகாதோ வெனின்? ஆகாது. என்னை? குணங் குணியை விட்டு என்று நீங்குமாறில்லை. மலரினிடத் தவ்வாறன்றி வாடின பொழுது மணம் நீங்கக் காண்கின்றோ மாதலாற் குணமாகா தென்க. அம்மணம் பூவை விட வேறு மன்று. பூவு மன்று. பூவைப் போல் தனித் தறியப்படுவது மன்று. இம்மணமுடைமையே பூவைப் பூவென மதித்தற் கேதுவாகும். மணம் பிரியில் பூ வாடிப் போகும். அப் பொழுதப் பூவை யொருவரும் விரும்புவதில்லை. மணமில்லாத அதாவது பொதுவான வாஸனையே யன்றிச் சிறப்பான வாஸனை யில்லாத பூக்களுமுள. அவற்றை யாரும் விரும்புவதில்லை. பார தத்தில் நெல்லிக்கனி பொருந்து சருக்கத்தில்

“குலமிக வுடையர் குணமிக வுடையர்
குறைவில்செல் வமுமிக வுடையர்
நலமிக வுடைய ரென்னினுங் கல்வி
ஞானமற் பமுமிலா தவரை
வலமிகு திகிரிச் செங்கையாய் முருக்கின்
மணமிலா மலரென மதிப்பேன்”

நகுலன் கூறியது மிக்கு கவனிக்கத் தக்கது.

4. இது போல சிவத்தின் அருள் என்னுங் குணமாகிய வியாபக நிறைவே சிவ மண மெனப்படும். இச் சிவ மணம் சிவ வியாபகத்துள் வியாப்பியமான உலகப் பொருள், உயிர்ப்பொருள்களினிடத்து நிறைந்திருக்கும். இன்றேல் உலகப்பொருளிருத்தற்கு முயிர்ப்பொருளிருத்தல் இயங்குதற்கு மியலாவம். நிறைந்திருப்பினும் அந்நிறைவாகிய மணஞ்சீவனிடத்துச் சிறந்து விளங்கும். அதாவது மலரிடனித்து மணஞ் சிறந்து காணப்படுவது போல ஜீவனிடத்துத் திருவருள் சிறந்து விளங்குமென்பதாம். அத்திருவருள் ஜீவனுமன்று. ஜீவனின் வேறுமன்று. ஜீவனைப்போலறியப்படுவதுமன்று· ஜீவனுக் கறிவிப்பது கொண்டறியப்படுவதாம். ஜீவனென்பது இவ்விடத்து மானுடப்பிறவியெய்திய ஜீவனையே குறிக்கும். அருள்விளங்குதற்குரியது அதுவேயாம். அருள்விளக்கங் கூறுஞ்சரித்திரங்களெல்லா மக்களையே குறித்து நிற்றல் கவனிக்கத்தக்கது. யானைமுதலிய பிறவுயிர்களிடத்தும் அருள்விளங்கிய சரித்திரங் காணப்படுகின்றதே யெனின்? அது விதியாகமாட்டாது. அரசன் மிகச்சந்தோஷமான தினத்தில் குற்றஞ் செய்தவர்களை விடுவது கொண்டு அத்தகைய குற்றமெல்லாந் தண்டிக்கக்கூடியவல்லவென்று வாதிப்பாரில்லாததுபோல, பெருமானுடைய் அற்புதச்செயலாகிய மிருகாதிகளினருள் விளக்கத்தைப் பெரியோர் விதியாக வெடுத்துக் கூறமாட்டார்.

5. பூத்தது:—மணம் அரும்பினிடத்தடங்கியிருக்கின்றது. அரும்புப்பருவம் நீங்கி விரிந்தபொழுது வெளிப்பட்டுத் தோன்றுகின்றது. அந்நிலையைத்தான் பூத்ததென்று வழங்கப்படுகின்றது. விரிதலாகிய காரணத்தால் மலரென்றும் பெயர் பெறுவதாயிற்று. அவ்விரிதலை நேரிற்காணுதவிடத்தும் மணம் காரணமாக விரிந்தது என்று அறியப்படும். ஆகவே அரும்பு பூத்தால் மணமும் பூத்ததாகும். இதுபோல ஜீவன் யான் எனதென்னு மகங்காரத்தால் மூடப்பட்டிருக்கும்போது அரும்புக்குவமை. அப்பொழுது சிவமணமாகிய அருள் அடங்கியிருக்கும். அம்மௌட்யம் யோகாப்யாஸமாதிகளால் நீக்கப்பட்டபொழுது மலருக்குவமை. அந்நிலையிற்றிருவருள் வெளிப்பட்டுப் பிரகாசிக்கும். அடங்குதலும் வெளிப்படுதலு மருளுக்குக்கூடுமாயின் வியாபகத்திற் கிழுக்காகாதோ வெனின்? அடங்குதலென்

பது விளங்காமை மாத்திரையே குறித்து நிற்றலால் இழுக்காகா தென்க. அங்ஙனமாயின் மணம் நீங்கவும்பெறுவதான மலரோடு ஜீவனை உவமித்தாலெவ்வாறு பொருந்துமெனின்? ஜீவனிடத்தில் சிவமணம் விளங்குவதற்கேயன்றி ஜீவனுக்குஞ் சிவனுக்குமுள்ள பொருள் சம்பந்தத்திற் கின்மையால் அது ஏகதேச வுவமையா மாதலில் பொருந்துமென்க. இக்கருத்தினை முதற்கண் எடுத்துக் கொண்ட திருமந்திரத்தில் "பூவினிற்கந்தம் பொருந்திய" என்றும் "ஜீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது" என்றுங் கூறியதனாலுங் கவனிக்கத்தக்கது. ஆகவே ஜீவனும் சிவனும் எக்காலத்தும் பிரிக்க முடியாத பொருள்களாம். பிரிப் பின்றிய இந்நிலையினைத்தான் அத்துவித மென்று வேதாகமங்களில் வழங்கப்படுகின்றது.

மணத்தைக்கொண்டு மணத்தைப் பற்றுதல்போல் திருவருளைக்கொண்டு திருவருளைச்சாரவேண்டும். இக்கருத்துப்பற்றியே "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்றருளிச் செய்தார் ஸ்ரீமணிவாசகப் பெருமானும்.

6. திருவருள் எனினும் திருவடி எனினும் ஒக்கும். தத்துவ சோதனைசெய்து தத்துவங்கள் யாவும் நீக்குங்கால் முதற்கண் தோன்றுவதனாலும் தத்துவங்களை மாயையினின்று தோற்றுவிக்கு முதலாயிருத்தலானும் திருவருளைத் திருவடியென்றனர். இத்திருவடி யடைதலாகிய திருவருட்பேற்றையே முத்தியெனச் சைவசித்தாந்த நூல்கள் சிறப்பித்துக் கூறும். இத்திருவருள் யான் எனதென்னும் போதமற்றவிடத்து விளங்கித்தோன்று மென்பதை

"பரையுயிரில் யான் எனதென் றறநின்ற தடியாம்" என உண்மை நெறிவிளக்கத்தினும் போதமற்றவிடம் மலருக்குவமையாய் அம்மலரிடத்து திருவருளாகிய திருவடி மணம் விளங்கப்பெறு மென்பதை "மலர்மிசை யேகினான் மாணடி" என திருக்குறளினும் அருளிய வாற்றாலறிக.

இனி அடியென்றதனால் முடி முகம் முதலியனவுங் கொள்ள வேண்டுமே? கொள்ளுங்கால் விபாகத்துக் கிழுக்காகாமல் எவ்வாறு கொள்ளக்கூடுமெனின் மேற்கூறிய உண்மைநெறிவிளக்கத்தில்

"பரையுயிரில் யானெனதென் றறநின்ற தடியாம்.
பார்ப்பிடமெங் குஞ்சிவமாய்த் தோன்றலது முகமாம்
உரையிறந்த சுகமதுவே முடியாகும்" எனவும்.

"அடியெனு மதுவு மருளெனு மதுவு
மறிந்திடில் நிர்க்குண நிறைவு
முடியெனு மதுவும் பொருளெனு மதுவு
மொழிந்திடிற் சுகம்"

என ஸ்ரீ தாயுமானசுவாமிகளும் அருளிச்செய்திருப்பதை உற்றுநோக்குவாருக்கு வியாபகத்துக்கிழுக்காகாமல் அடிமுடிகளின் பொருள்கள் இனிது கொள்ளக்கூடுமெனக. திருவாசகத்தில் "பாதமிரண்டும் வினவிற் பாதாள மேழினுக் கப்பால்,சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற தொன்மை" என்றதும் இக்கருத்தினையே மற்றொரு வகையால் விளக்குகின்றது. அதாவது பாதாளமேழினுக் கப்பாலென்றது உணரமுடியாதென்றும் பொருளாய் யானெனதென்னு முணர்வற்ற நிலையினையும், சொல்லிறந்து நின்ற தொன்மையென்றது அநுபவிக்கப்படினுஞ் சொல்லமுடியாத அகாதிச் சுகத்தினையுங் குறிக்கின்றவாறும்.

7. மேற்கூறிய திருவருளாகிய சிவமணம் ஜீவனுடைய புறநாட்டமாகிய உலகநாட்டமொழிந்த பரநாட்டமாகிய உள் நாட்டத்தில் விளங்கப்பெறுதலின் ஜீவனுக்குள்ளே சிவமணம் பூத்ததென்றார்.

இனி சீவனென்னுஞ் சொல்லினுள் முதலாவதாய் நின்ற நெடில் குறிலாயின் அதாவது சீகாரம் சிகாரமாயின் சிவன் எவப்பொருள் தருதலால் சொல்லாற்றலினாலும் சீவனுக்குள்ளே சிவமணம் பூத்ததென மேற்கூறிய பொருளாற்றல் தோன்றுமாறுங் காண்க.

இச்சிவமணமாகிய திருவருள் விளங்கவும், விளங்கமுயலவும், அம்முயற்சி முற்றுப்பெறவும் அத்திருவருளைத் துதிப்போமாக.

பொ. முத்தையபிள்ளை.

## பிறர்நலம் பயக்கும் கைங்கர்யம் புரிதலில் கவனிக்க வேண்டிய சில உண்மைகள்.

——:(*):——

1. உனக்குக் கேடு ஒன்றையும் விளைவிக்காமல் பிறர்நலம் பெற யாதேனும் ஒரு கைங்கர்யம் புரிய விரும்புவாயானால் அடியிற்கண்ட மூன்று உயர்தர லக்ஷியங்களான தத்துவங்களையறிந்து அவைகளை அநுசரித்து நீ நடைபெற வேண்டும்.

(1) பிறர்நலம் பயக்கும் கைங்கர்யத்தைச் செய்தலில் நீ பேராநந்தங்கொள்ளுக. அதுதான் கைங்கர்யமார்க்கத்தில் அடிவைத்தலாகும்.

(2) நான் செய்தேனென்று இறுமாப்புக் கொள்ளற்க. ஈசுவரனுடைய ஸேவகனாக அல்லது ஒரு பெரியாருடைய ஸேவகனாக உன்னை மதி. கைங்கர்யம் செய்யும் திறமை அவரால் நீ பெற்றாய் என நினை.

(3) உன்னிடத்திலும் பிறரிடத்திலும் ஈசுவராம்சம் இருத்தலை நீ உணர்.

2. பிறரைப்பற்றி நீ பேசக்கூடியதும் நினைக்கக்கூடியதுமெல்லாம், முன்னமேயே பிறரால் உன்னைப்பற்றி பேசப்பட்டும் நினைக்கப்பட்டும் இருக்கின்றனவென நீ அறிக.

3. நீ பிறரால் துன்புறுங்கால் துன்பம் செய்கிறவன், துன்பப்படுகிறவனைவிட அதிகமாய் வருந்துவான் என நினை.

4. ஒருவன்மேல் வாஞ்சையால் அவனுக்கு நீ செய்யும் கைங்கர்யம் உன்னுடைய மன நேர்மையையும் அவனுடைய மன நேர்மையையும் கெடுக்காமலிருக்கவேண்டும். உன் கைங்கர்யம் இருவர் மனத்தையும் நொய்மைப்படுத்தாமல் பலப்படுத்தல் வேண்டும்.

5. உன்னைவிட மற்றவன் கைங்கர்யம் புரிவதில் அதிக ஆற்றலுள்ளவனாகவிருக்கிறானென பொறுமைகொள்ளற்க. உன்னுடைய மெல்லிய சக்தியால் பிறருக்குக் கைங்கர்யம் செய்ய முடியாமலிருக்கும்போது வேறொருவன் கைங்கர்யம் செய்தலில் அதிக ஆற்றலுடையவனாக இருப்பதைப்பற்றி நீ சந்தோஷம் கொள்ளுக.

6. நீ ஒருவனுக்குக் கொடுக்கும் கொடையை அவன் மாத்திரம் உபயோகப்படுத்தவேண்டுமென்று விரும்பாதே. ஒருவனுக்குக் கொடுத்த கொடையானது அவனை ஸந்துஷ்டி செய்தலுமல்லாமல் வேறொருவனையும் ஸந்துஷ்டி செய்கிறது என அறிந்து நீ சந்தோஷம் கொள்ளுக.

7. பிறருக்கு உதவிபுரியும் காலத்தில், நீ எந்த லக்ஷ்யத்தை நோக்கி கைங்கர்யம் செய்கின்றாயோ, அந்த லக்ஷ்யத்தில் பூர்ண சிந்தனை கொள்ள முயலுவாய். அவ்விதம் முயன்றால் அந்த லக்ஷ்ய நிலையைப் பெறுவாய். இன்னும் அதிக கைங்கர்யம் நீ செய்யத் திறமை பெறுவாய்.

8. நீ செய்யும் எக்கைங்கர்யத்தின் பயனையும் எதிர்பாராதே. உன்னிடம் உதவி பெற்றவன் நன்றிபாராட்டுகிறானில்லையே என வருந்தாதே. நீ புரியும் கைங்கர்யம அவன் சரீரத்திற்கன்று, அவன் ஆத்மாவுக்கு என நினை. அவன் வெளிப்படையாய் நன்றி பாராட்டாமல் மௌனமாயிருப்பினும் அவன் ஆத்மா என்றும் செய்ந்நன்றி பாராட்டும்.

9. நீ அன்பு பாராட்டுகின்றவர் உன்மேல் திரும்ப அன்புபாராட்டுதலை எதிர்பாராதே. அவர்பால் உன் அன்பு உறுதியாயும் உண்மையாயுமிருந்தால் அது எப்போதாகிலும் முன்பின்னாக அவர் ஹிருதயத்தைத் தாக்கும். பின்பு திரும்ப உனக்குமேல் அவர் அன்புசெய்வர். அதை எதிர்பாராமல் நீ அன்பு செய்து கொண்டே வரவேண்டும். உன் அன்பு என்ற ஊற்று வற்றிவிட்டதென அவர் நினையாமலிருக்கட்டும்.

10. தன்னை அடக்கி ஆளமுடியாதவன் உண்மையில் பிறனுக்குத் தொண்டுசெய்ய இயலாதவனென நினை.

11. உயர்நலமுள்ள கைங்கர்யம் என்பது பிறர் பாரத்தைப் பூர்த்தியாய்த் தாங்குதலன்றாம். ஆனால் பிறர் பாரம் சுமத்தலை இலகுப்படுத்துவதாமென்று நினை.

12. பிறருக்குப் பயன்படும்படி நீ கைங்கர்யம் செய்தல் அவரவர் உயர்வெனக் கருதிய நோக்கத்தையறிந்து அதற்கு ஒற்றுமையாய்ச் செய்தலே நலம்.

13. ஒவ்வொருவனுடைய உயர்நலத்திற்குத் தக்கபடி அவனவனின் கைங்கர்ய முறை நடைபெறும். உலகில் பிறர் கைங்கர்யத்தை எதிர்பார்க்கிறவர் எத்தனை பேர் இருக்கின்றார்களோ அத்தனை விதமான கைங்கர்ய முறைகளுமுண்டு.

14. கைங்கர்யம் செய்தலுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிஷமும் உரித்தானது. நற்செயலுக்கு ஒருகால் சமயம் கிடைக்காமல் போகலாம். நல்ல நினைப்புக்கு எப்போதும் சமயம் உண்டு.

15. ஒருவன் கைங்கர்யம் செய்தலில், எவ்வளவு தன்னை மறக்கிறானோ, அவ்வளவு ஞான முறையில் கவனம் செலுத்தினவனாக ஆவான். ஒருவன் செய்யும் ஒவ்வொரு சிறிய நற்காரியமும் கைங்கர்யம் செய்தலில் தன் ஆற்றலை அதிகப்படுத்தும்.

16. ஒருவனுக்கு நீ உதவி செய்யும் வழிமுறை அவனுக்குப் பிடிக்காத பக்ஷத்தில் அவனுக்குப் பிடிக்கும் வேறு உதவி வழிமுறையை நாடு. அவனுக்கு உதவிபுரிதல் என்பது உன் விருப்பம். அந்த உதவி புரிதல் நீ குறித்த மாதிரியாகத் தான் இருத்தல் வேண்டுமென நீ விரும்பாதே.

17. ஒருவனைத் தெரிந்தாலும் தெரியாமற்போனாலும் உற்ற காலத்தில் அவனுக்கு ஏதாவது குறைப்பாடு நேரிடும் சமயத்தில் உதவி செய்தலில் கூசாதே. அச்சமயமே அவனுடன் நீ சகோதரனாதலுக்கு அநுகூலமானது. கூச்சம் என்பது அகங்காரத்தின் ஒரு பரிணமம். கூச்சம் கொள்ளுதல் ஆபத்துக்காலத்தில் பிறருக்கு உதவி புரிதலுக்குத் தடையாம்.

18. "இன்று பிறர்க்கு அதிக உதவி புரிந்திருக்கிறேன்" என நினையாதே. "இன்னும் அதிகமாக உதவி புரிந்திருக்கக் கூடுமே. அவ்விதம் செய்யாமல் தவறிப்போய்விட்டேனே! உலகில் எவ்வளவோ துன்பமும் துயரமும் இருக்கின்றனவே! அதைத் துடைக்க நான் செய்கின்ற உதவி எவ்வளவு அற்பமானது"! எனச் சிந்தனை கொள்ளுக.

19. நம்மைவிட அறிவில் மேலாயினோரை நம்பிப் பணிந்து அவர் வழிபட்டு நடப்போமாயின், நம்மைவிடக் கீழாயினோரை நல்

வழிப்படுத்தல் இயலும். பெரியாரைப் பணிந்து அவர் வழி நடை பெறாதவன் பிறரை நல்வழிப்படுத்தல் எங்ஙனம்?

20. நீ சொல்லும் நற்புத்தியைப் பிறர் கேட்டு நடைபெற விரும்பினால், அதை நீயே நடத்திக் காட்டுதல் நலம்.

21. உன்னைப்போல் பிறரும் நற் சிந்தை கொள்ளுகிறவரென நினை. அவர் செய்யும் கைங்கர்யமும் நற் சிந்தையின் விளைவு என மதி.

22. பிறர் நிந்தனை செய்யும்படியான கீழான மனோநிலையில் நீ இராதே. இழிவும் நிந்தனையும் கீழான மனோநிலையின் காரியம் என நினை.

23. நீ கைங்கர்யம் செய்தலைக் கொண்டு, பிறரைவிட நீ உயர்வானவன் என நினைத்தால், அந்நிமிஷமே, நீ செய்யும் கைங்கர்யத்தின் நலம் குன்றும்.

24. உண்மையான கைங்கர்யம் என்பது, பிறருடன் கலந்து ஒற்றுமையாகச் செய்தலாம். நான் நீ என்ற வேற்றுமை இருத்தல் கூடாது. "இதோ பார்த்தாயா? உனக்கு நான் உதவி செய்கிறேன்" என்ற எண்ணம் நிகழ்தலை ஒழித்தல் வேண்டும்.

25. நீ கைங்கர்யத்தைச் செய்தல் முதலிலும், அதைப்பற்றிப் பேசுதல் பின்புமாக இருத்தல் நன்று. கைங்கர்யத்தைப் பற்றிப் பேசாமலிருத்தலே அதினும் நன்று.

26. பிறருக்கு நலம்தரும் கைங்கர்யம் செய்தலின் ஒருவனின் திறமை அவன் குடும்பத்தில் அவன் நடைபெறும் ஒழுக்க முறையினால் அறியத்தகும். அவன் வெளிப்படுத்தும் புத்தகங்களினாலும், அவனைப் பிறர் மதிக்கும் மதிப்பினாலும், அவன் பிரசங்கங்களாலும், அவன் பகிரங்கமாய்ச் செய்யும் கர்மங்களாலும், அவன் தகைமையை அறிதல் முடியாது. பிறர் அறிய பகிரங்கமாய்ச் செய்யும் கர்மங்களால் ஒருவன் பெரியான் ஆகான். பிறர் அறியாமல் குப்தமாய் இருந்தோறும் ஒருவன் செய்யும் நலமுள்ள சிறிய பல கர்மங்களினால் தான் ஒருவன் பெரியானாக ஆகத்தகும்.

27. கைங்கர்ய முறையின் உயர்நலம் பெறவிருப்புவான், தன் உடைமை முழுமையையும் கொடுக்க வித்தனாக இருத்தல்வேண்டும்.

28. ஒருவன் பல துறைகளில் உன் கைங்கர்யத்தை வேண்டுவான். அவன் கேட்கிறதை யெல்லாம் கொடுத்தல் நலமன்று. அவன் குறைப்பாடு இன்னது என அறிந்துசெய்தலே உயர்நலமுள்ள கைங்கர்யமாகும். அப்படிச் செய்தலில் அவன் வெறுப்புக்கொள்ளினும் அதைக் கவனியாதே. ஆனால் நீ செய்யும் கைங்கர்யம் அவனுக்கு சுகிர்தம் பயக்கு மியல்பினதாக இருக்கட்டும்.

29. ஒருவனுக்குச் செய்யவேண்டியதை மற்றொருவனுக்குச் செய்தல் நலமுள்ள கைங்கர்யமாகாது. நேர்வழிவிட்டு விலகி, அநேகர் பல கைங்கர்யங்கள் செய்கின்றார்கள். அவை உண்மையான கைங்கர்யங்கள் அல்ல.

30. அவன் அவன் செய்யவேண்டிய கைங்கர்யத்தைச் செய்யாது ஒழித்தல் நலமன்று.*

ப. நா.

## நன்மொழி.

---

126. தேஹம் நான் அல்லன்; இந்திரியங்களும் நான் அல்லன்; நான் ஆத்மா. ஆத்மா நிர்மலன்; அதனால் நானும நிர்மலன். ஆத்மா வீர்யன்; அதனால்நானும் வீர்யன். ஆத்மாசாந்தன்; அதனால்நானும் சாந்தன். ஆத்மா காருண்யன்; அதனால் நானும் காருண்யன். ஆத்மா அஸங்கன்; அதனால் நானும் அஸங்கன். ஆத்மா சுதந்தரன்; அதனால் நானும் சுதந்தரன். ஆத்மா ஸத்ய ஸ்வரூபி; அதனால் நானும் ஸத்யஸந்தன். ஆத்மாஸமநிலையினன்; அதனால் நானும் ஸமநிலையினன். ஆத்மா ஆநந்தன்; அதனால் நானும் ஆநந்தன்.

ஒவ்வொருவனும் தினந்தோறும் சொற்பகாலமேனும் உலக விஷயத்தில் புகுமுன் ஏகாந்தங்கொண்டு மேற்கண்டபடி தன்னுள் சிந்தனைசெய்துவர ஞாந உதயமாகும், மெய்யுணர்வு பெறுவான்.

---

* Adapted from the Theosophist.

416

# துகாராம் பாவாவின் சரித்திரம்.

## பூர்வ பீடிகை.

மஹாராஷ்ட்ர தேசத்தில் முன் காலத்திலிருந்த மஹா ஸாதுக்களுக்குள் மேன்மை பெற்றவர் துகாராம் பாவா. அவர் ஜாதியில் மராட்டியனாயினும் தன்னிடத்திலிருந்த அத்விதீய பக்திதேஜஸாலும் வாக்கியாமிருதத்தாலும், மஹாராஷ்ட்ர தேசத்திலுள்ள ஸகலர்களாலும் பூஜிக்கப்படும்படி ஆனார். இந்த பகவத்பக்தருடைய சரித்திர மஹிமையை வாமந பண்டிதர், மோரோ பண்டிதர், மஹிபதி முதலான கவிகள் அதிக பிரியமாய்ப் பாடியிருக்கிறார்கள். தாத்காலிக ஜநங்களுக்கு அதைச் சொல்லுவதும் பிரயோஜநமுள்ளதே.

ஸ்ரீசங்கராசாரியர் பிரஸ்தாநத்திரய பாஷ்யங்களைச் செய்து வேதவிஹித ஸத்திய தர்மத்தை எங்கும் பரவச் செய்தார். கர்மகாண்டாபிமாநியான பிராஹ்மணர்களுடன் வாதம் செய்து தான் அவலம்பித்த தர்ம மார்க்கத்தை ஸ்தாபித்தார். இந்த மார்க்கம் பக்தியை மேலாடியும் ஜீவாத்ம பரமாத்ம ஐக்கிய பாவத்தையும் பிரதிபாதிக்கிறது. முகுந்தராஜ என்ற ஒருவர் விவேகஸிந்துஎன்னும் ஒரு பிராகிருத காவ்யத்தைச் செய்து அதில் ஸ்ரீசங்கராசாரியருடைய வேதாந்த மதத்தை விவரித்திருக்கிறார். ஜநங்களுக்கு அத்வைத மத ஞாநமும் இந்தக் கிரந்தத்தால் கிடைத்தது. பிறகு ஞாநேசுவரர் என்ற மஹா ஸாது ஏற்பட்டார். இவர் வேதாந்த மதம் நிஜமான பக்தி மார்க்கத்துக்குப் பாதகமாயில்லை, ஸாதகமாகவே யிருக்கிறதென்று தான் செய்த பகவத்கீதா வியாக்யாநமாகிய பாவார்த்ததீபிகையில் பிரதிபாதித்தார். இதுவே ஞாநேசுவரீ என்று இப்போது விளங்கும் கிரந்தம். அவர் அமிருதாநுபவம் என்றும் ஸமாஸ மென்றும் கிரந்தங்களைச் செய்து எல்லாவற்றிலும் பகவத்பக்தியின் மஹிமையைக் கொண்டாடியிருக்கிறார். நாமதேவர் (தையல்காரன்) ஸாவந்தா (மாலீ) தோரா(குயவன்) கபீர்(துருக்கன்) முதலான ஸாது ஜநங்கள் ஞாநேசுவரர் இருந்த காலத்திலிருந்தார்கள். இவர்களுக்குள் நாமதேவரும், கபீரும் பக்திரஸத்தையே தங்களுடைய கவநங்களில் மேலாகக் காட்டியிருக்கிறார்கள். நாமதேவரைச் சேர்ந்த ஜநாபாயி, முக்தாபாயி முதலானவர்கள் பக்திபரமாகவே பாடியிருக்கிறார்கள். ஆகவே இந்த பக்திரஸம் மஹாராஷ்ட்ர

தேசத்திலிருப்பவர்களுக்கு ஸஹஜமாகவே யிருந்தது. இதனால் ஸதாசாரம், தர்மநிஷ்டை இவைகளும்விசேஷமாய்க்காணப்பட்டன. நிர்குண, நிர்விகாரமான பரப்பிரஹ்மம் ஸகுண பிரஹ்மத்தின் சிரவணாதி ஒன்பதுவித பக்தியால் தெரியும்படி ஆயிற்று. எங்கும் பக்தி மார்க்கத்தின் மஹிமை விசேஷமாக விளங்கி பேதபாவம் குறைவடைந்தது. இந்த மார்க்கத்தை எல்லாரும் தேடலாம் என்றும் ஸித்தித்தது. ஆகையால் தான் முற்காலத்தின் ஸாது ஜநங்களுக்குள் பிராஹ்மணர்கள், மராட்டியர்கள், குடியர்னவர்கள், தையல்காரர்கள், குயவர்கள், சக்கிலியர்கள், பறையர்கள் முதலான மேலானவர்களும் கீழானவர்களும் காணப்படுகிறார்கள். இவர்கள் ஜாதியின் மேலான கீழான தன்மைகளைக் கவனிக்காமலேயே யோக்கியதாபாவத்தைக் கவனித்தார்கள். ஆகையால் இவர்கள் சொல்லும் பக்தி மார்க்கம் ஜநங்களுக்குள் பரவிற்று.

இந்த பகவத்பக்தி பராயணர்களான ஸாதுக்கள் கூடுவதற்கு பண்டராபுரம் என்ற இடம் ஏற்பட்டிருந்தது. இவ்விடத்தில் வருஷத்திற்கு இரண்டு தடவை ஸாதுக்கள் சேருவார்கள். இதனால் அவர்களுடைய பக்தியும் வைராக்கியமும் அதிகப்படும். இவர்களுடைய வாக்கிலிருந்து ஞானேசுவரர், நாமதேவர், ஜனாபாயி, முக்தாபாயி முதலானவர்களின் வாக்கியங்களே வெளிப்படும். இதைக் கேட்கிற ஸாதாரண ஜநங்களும் பக்திரஸத்தில் முழுகி தேகத்தை மறந்து நடநம் செய்வார்கள். இவர்களுக்கும் ஸாதுக்களின் வாக்கியங்கள் அதிக சிரவணத்தால் ஸஹஜமாகி, ஊரிற் சென்ற பிறகும் இவர்கள் அந்த ஆநந்தத்திலேயே முழுகிப் போவார்கள்.

இந்த ஸதாசார ஸாதகமான பக்திமார்க்கம் மஹாராஷ்ட்ர தேசத்தில் பிரசுரித்திருந்தபடியால் பகவத்பக்தர்களும் விசேஷமாய்க்காணப்பட்டார்கள். இவர்களில் நம்முடைய சரித்திர நாயகரான துகாராம் பாவா ஒருவர். ஆனால் தன்னுடைய அதிசயமான பக்தி வைராக்யாதிகளாலும், விசேஷமாய் போதிக்கும்படியான கவநங்களாலும் இவர் சிரோமணியானார். ஸந்த மண்டிலியில் அவர் குருஸ்தாநத்தைப் பெற்றார். அப்படிப்பட்டவருடைய சரித்திரத்தைக் கேட்பதில் நமக்கும் சந்தேகமின்றி ஞாநமுண்டாகும்.

## குல விருத்தாந்தம்.

பூனா பட்டணத்திலிருந்து சுமார் 14 மைல் தூரத்திலிருக்கிற இந்திரியாணி என்ற நதிதீரத்தில் தேஹூ என்ற ஒரு கிராமமிருக்கிறது. இந்த கிராமத்தில் மோரே என்று பெயருள்ள ஒரு மராட்டியவீட்டுக்காரர்கள் இருந்தார்கள். இந்தக்குலத்தில் துகாராம்பாவா சாலிவாஹன சகாப்தம் 15-வது நூற்றாண்டின் முதல் பாதத்தில் பிறந்தார். மஹாராஷ்ட்ர தேசத்தில் இதரமான அநேக குலங்கள் போல் இந்த மோரே என்கிற குலத்திலும் பண்டரிக்கு அடிக்கடி போய்வரும் வழக்கம் தலைமுறை தலைமுறையாக நடந்து வந்தது. ஒரேவருஷத்தில் இரண்டு தடவை போகிறதுமுண்டு. துகாராம் பாவா வுடைய முந்தின ஏழு தலைமுறையோர்களைப்பற்றி மஹீபதி கவிஎழுதியிருக்கிறார். ஏழாவது தலைமுறையைச் சேர்ந்தவர் விசுவம்பரர்என்பவர். இவர் பகவத் பக்தர். இவருடையதொழில் வியாபாரம். அதைமிகப்பிராமாணிகமாய் நடத்திவந்தார். வியாபாரத்திற்கிடைப்பதை ஸத்காரியத்தில் செலவு செய்து வந்தார். ஸாதுக்களையாவது தீர்த்த யாத்திரைக்குப் போகிறவர்களையாவது கண்டால் அவர்களைத் தன் ஜாகைக்குக் கொண்டுபோய் வெகு ஆதரவுடன் சுசுரூஷை செய்து அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள வேண்டியதைக் கேட்டுக்கொள்ளுவார். அவர் வாக்கு பகவந் நாமத்தை உச்சரித்துக் கொண்டேயிருக்கும். இரவில் தன் வீட்டில் ஜனங்களைச் சேர்த்து பஜனை செய்வார், கீர்த்தனங்களைப் பாடுவார். ஞானதேவர், நாமதேவர் முதலானவர்களின் கவனங்களெல்லாம் அவருக்கு முகபாடம். நூதனமானவைகளையும் எழுதிக்கொண்டு பாடம் பண்ணுவார். விசுவம்பரர் பக்திபரராயிருப்பதைக்கண்டு அவருடைய தாயார், "மகனே உன்னுடைய முன்னோர்கள் அநேகவருஷமாய் பண்டரீக்குப்போய்வருவதுண்டு, நீயும் போகவேண்டும். இதுதான் உன் ஜந்ம ஸாபல்யத்துக்குச் சாதகம்" என்று அவனுக்குச்சொன்னாள். தன் தாயாரின் இவ்வுபதேசத்தை சிரஸால் வகித்து விசுவம்பரர் பிரதிவருஷமும் பண்டரீக்குப்போகத்தொடங்கினார். ஏற்கனவே பக்திபரனாயிருந்தஇவருக்கு பண்டரீக்குப்போய்ஸாதுஜனங்களுடன்சேர்ந்துபக்திவசனங்களை அவர்களிடமிருந்து அடிக்கடி கேட்கிறதினால் பக்திபாவம் அதிகப்பட்டது. பண்டரீநாதருடைய ஞாபகமே மேலிட்டுக்

கொண்டுவந்தது. ஒருதடவை போய்வந்த பிறகு சிலநாள் வரையில் அவருக்கு மநஸ் ஸமாதாநமே யிருக்கமாட்டாது. பண்டரீக்கு ஒரு வேளை போனால் மறுபடியும் திரும்பிவரக் கூடாதென்று தோன்ற ஆரம்பித்தது. எட்டு மாதம் வரையில் பதினைந்து நாளைக்கு ஒரு தடவை பண்டரீக்குப் போய்க்கொண்டு வந்தார். இதனால் அவருடைய வியாபாரம் சரியாக நடந்து வரவில்லை. ஜநங்கள் அவரைப் பார்த்து ஈசுவரன் ஸகல ஸ்தாவர ஜங்கமங்களையும் வியாபித்திருக்கிறார். அவரில்லாதவிடம் யாதொன்றுமில்லை, ஆகவே பண்டரீக்குப் போவதில் என்ன பிரயோஜநம் என்று சொன்னார்கள். இதற்கு விசுவம்பரர் இந்த வேதாந்தத்தால் எனக்கு ஸமாதாநமாகவில்லை, நிர்க்குண நிராகாரப் பிரஹ்மத்தை எவர்கள் எப்படி உபாஸித்தாலும் ஸகுணப்பிரஹ்ம உபாஸனையில்தான் என் புத்தி பிரவிர்த்தித்திருக்கிறது, பண்டரீயிலேயே இதை விசேஷமாகப் பார்க்கலாம், மற்றவிடத்தில் முடியாது என்று சொன்னார். இதைக் கேட்டு ஜநங்கள் அவரைப்பார்த்து, அப்படியானால் பண்டரீயிலேயே போய் இருந்துவிடும், மறுபடியும் மறுபடியும் வீட்டுக்கு ஏன் வருகிறீர். ஸம்ஸாரத்தைத் துறக்கவேண்டுமென்று நீர் உத்தேசித்தால் நீர் செய்வது சரியே, ஆனால் பண்டரீநாதனிடத்திலும் வியாபாரத்திலும் புத்தியைச் செலுத்தலாம் என்று சொன்னால், மோசமே என்று சொன்னார்கள். அப்போது அவருக்கு யோசனை வந்தது. பதினைந்து நாளைக்கு ஒருதடவை போகாவிட்டால் மநத்திற்குச் ஸமாதாநம் ஏற்படமாட்டாது. ஸம்ஸாரத்தையும் விட முடியாது. இப்படி மநஸ் கலங்கியிருக்கையில் ஒருநாள் இராத்திரியில் விசுவம்பரர், பண்டரீநாதரான விட்டோபா தன்னுடைய விசேஷ பக்தியால் சந்தோஷமடைந்து, தேஹூ கிராமத்திலேயே வந்திருப்பதாக ஸ்வப்நம் கண்டார். மறுநாள் தன் ஸ்வப்நத்தை ஜநங்களுக்குச் சொல்லி தாள மிருதங்கங்களுடன் அவர்களையும் அழைத்துக் கொண்டு ஸ்வப்நத்தில் கண்ட மாமரத்தடிக்குச் சென்றார். அங்கே வெட்டிப்பார்க்குமளவில் விட்டோபாவின் விக்கிரஹம் அகப்பட்டது.

(இன்னும் வரும்)

**A.** சிவராவ்.

420

# ஹிந்துக்களின் பூர்வநூல்கள்.

ஹிந்துக்களின் பூர்வநூல்கள் பொதுவாய் ஶ்ருதிகள் எனவும் ஸ்மிருதிகள் எனவும் இருவகையாய்ப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

ஶ்ருதி:—அநாதியாகவும், மனிதர்களாலியற்றப்படாததாகவும், ஈசுவரனால் அப்போதைக்கப்போது ப்ரஜாபதிகள், ரிஷிகள் மூலமாய்த் தெரிவிக்கப்பட்டவை யெனவும், எக்காலத்திலும் எத்தேசத்திலும் மாறுதலையெனவும் கொள்ளப்படுவதே ஶ்ருதிகள் (Revelations) எனப்படும்.

ஸ்மிருதிகளோ, முற்கூறிய ஶ்ருதிகளை யநுஸரித்து மனிதர்களின் காலதேசவர்த்தமானங்களுக்கும் சௌகரியங்களுக்கும் தக்கவாறு, மனிதர்களாலேயே இயற்றப்பட்டவையெனக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

விசேஷமாய் ஶ்ருதிகளும் ஸ்மிருதிகளும் ஒற்றுத்தானிருக்கும். விரோதம் ஏற்படின், ஸ்மிருதியினும் ஶ்ருதிகள் தான் சிறந்த ஆதாரங்களாகும். ஶ்ருதிகள், 1. மந்த்ரம், 2. ப்ராஹ்மணம், 3. ஆரண்யகம், 4. உபநிஷதங்கள் என நான்கு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

இப்பிரிவுகளுள் முதலாவது மந்த்ரங்கள். இவைகளில், இந்திரன், வருணன், அக்நி, சூரியன் முதலான தெய்வங்களைக் குறித்து முன்னோர்களாற்செய்யப்பட்ட தோத்திரங்களும், அதனால் ஏற்படும் பயன்களைப்பற்றிய விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. இம்மந்த்ரங்கள் முன் ஒருகாலத்தில் பலரிஷிகளால் சொல்லப்பட்டு பல ரிஷி பரம்பரைகளால் பற்பல யாகாதி க்ரதுக்களுக்கு அநுஷ்டிக்கப்பட்டு, பற்பல விடங்களில் வெவ்வேறாயிருந்தன வென்று தெரியவருகின்றது. இவ்வாறு சேர்க்கையில்லாமல், ஆதியில் இம்மந்த்ரங்கள் கவநம் செய்யப்பட்ட காலத்துக்கு சந்தஸ் காலம் என்று பெயர்.

இவ்வாறு சில காலங்கள் கழிந்தபிறகு, சிதறிக்கிடந்த இம்மந்த்ரங்களை யெல்லாம் ஒருங்குசேர்த்து, இம்மந்த்ரங்களின் கர்த்தர்களாகிய ரிஷிகள் அல்லது ரிஷிபரம்பரைக்ரமமாய் ஒழுங்குபடுத்தின

காலமொன்றுள்ளது. இதற்குத்தான் ஸம்ஹிதை யெனவும், இக்காலத்திற்கு ஸம்ஹிதாகால மெனவும் சொல்லப்படும். இவைகளின் காலங்களைத் துல்யமாய் நிர்ணயிப்பது இப்பொழுது அஸாத்தியமாயினும், ஸம்ஹிதையாகச் சேர்க்கப்படுமுன், மந்த்ரங்கள் சிதறிக் கிடந்த சந்தஸ் கால மொன்றிருந்திருக்க வேண்டுமென்று ஊஹிக்கப்படுகின்றது.

மேலும், எல்லா மந்த்ரங்களும், ஒரே காலத்திலாவது, ஒரே தேசத்திலாவது, ஒரே ரிஷியாலாவது சொல்லப்படவில்லை யென்று தெரியவருகின்றது. ஏனென்றால் மந்த்ரங்கள் முற்காலத்தில் வழங்கப்பட்டுவந்தன வென்றும் வெவ்வேறு ரிஷிகளால் வழங்கப்பெற்றன வென்றும், வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு ஸந்தர்ப்பங்களில் இயற்றப்பட்டனவென்றும் நிரூபிக்கத்தக்க ஆதாரங்கள் மந்த்ரங்களிலேயே அகப்படுகின்றன.

இவ்விதமாய்ச் சேகரித்துப் பரிசோதித்து ஒழுங்கு படுத்தப்பட்ட ஸம்ஹிதைக்கு வேதம் என்று பெயர்

## நான்கு வேதங்கள்.

வேதம் நான்கு. அவையாவன ரிக், ஸாம, யஜுஸ், அதர்வணங்களாம். மேற்கூறியவாறு முதன்முதல் செய்யப்பட்ட ஸம்ஹிதையே ரிக்வேதம் அல்லது ரிக்வேதஸம்ஹிதையாகும். இவ்வாறு ரிக்வேதம் மாத்திரம் தனித்திருந்த ஒரே வேதகாலம் முன் ஒன்றிருந்திருக்கவேண்டும். பிறகு ரிக்வேதமந்த்ரங்களில், யாகாதி க்ரதுக்களுக்கு உபயோகப்படும் மந்த்ரங்களை மாத்திரம் பிரித்து அவைகளுடன் சில புதியமந்த்ரங்களைச் சேர்த்து, செய்யப்பட்டவையே யஜுர்வேதமாகவும், ரிக் மந்த்ரங்களில் சிலவற்றை கானம் செய்ய அமைத்துக் கொள்வதற்காக எடுத்து அவற்றுடன் சில புதியவைகளையும் சேர்த்துச்செய்யப்பட்டவையே ஸாமவேதமாகவும் அமைந்தனவென்று தெரியவருகின்றது. ஒரு வேதம் மூன்று வேதங்களானதற்கு இதுதான் காரணம். மேலும், முற்காலத்தில், யாகாதிகளில் நான்கு ரித்விக்குகள் முக்கியமாய் முதலில் ஏற்பட்டபொழுது அவர்கள் முறையே உபயோகிக்கஇவ்வாறு பிரிவினைகள் ஏற்பட்டனவென்று

மற்றொரு அபிப்பிராயமுமுண்டு. ரிக்வேதத்தால் ஹோதாவும், ஸாமத்தால் உத்காதாவும், யஜுர்வேதத்தால் அத்வர்யுவும், எல்லா வேதங்களாலும் ப்ரஹ்மாவும் யாகங்களை நடத்தவேண்டுமென்றும் ஆபஸ்தம்ப ஸூத்ரங்களில் கூறப்பட்டிருப்பதையும் காண்கலாம்.

இதைத்தவிர முன் ஒருகாலத்தில் ரிக், யஜுஸ், ஸாமம் என்ற மூன்றேவேதங்களிருந்தனவென்றும், அதர்வவேதம் பின்பு ஏற்பட்டதென்றும் ஊகிக்க அநேக ஆதாரங்கள் இருக்கின்றன. அக்காலத்தில் த்ரயீ (மூன்று வேதங்கள்)என்றே வழங்கப்பட்டு வந்திருக்கின்றது. மேலும், ரிக்வேத ப்ராஹ்மணமாகிய ஐதரேய ப்ராஹ்மணத்தில் மூன்று வேதங்கள் மாத்திரம் அக்காலத்திலிருந்தனவென்று சொல்லப்பட்டிருக்கிறது. பிறகு பூதங்கள் பிசாசங்களின் ஆராதனைகளும் சாந்திகளும், யந்திரம், ஆபிசாரப்ரயோகங்கள், க்ஷுத்ரவித்தைகள் முதலியன விசேஷமாய் வழங்க ஆரம்பித்தகாலத்தில் அதர்வ வேதம்* உண்டானதென்றும் தெரியவருகின்றது.

மேற்கூறியவைகளினின்றும், முன் ஆதிகாலத்தில், ஆங்காங்கு மந்த்ரங்கள் ஒழுங்கின்றி சிதறிக்கிடந்தன வென்றும், பிறகு அவைகள் ஒன்று சேர்க்கப்பட்டு ரிக்வேதஸம்ஹிதையாய் ஒழுங்குபடுத்தபட்டனவென்றும் அக்காலத்தில் ஒரே வேதம் தான்† என்றும் பிறகு யாகாதிகள் விருத்தியடைந்தபொழுது, ரிக்வேதத்திலிருந்து, ஸாம யஜுர் வேதங்கள் உண்டாயின வென்றும் பிறகு ப்ராஹ்மண கால ஆரம்பத்துக்குப் பிறகு அதர்வவேதம் உண்டாகி நான்கு வேதங்களாயினவென்றும் அறிந்து கொள்ளுகின்றோம்.

R. S. நாராயணஸ்வாமி ஐயர்.

---

* குறிப்பு:—அமவ-வெஷஷு-- யஜுதா ந-வய-க்ஷூ:
ஶாஷிஓவெளஷிகாஹிவாரஷி
கஉஷ்வூதிவாஷகசெவந சுதுஜுவிஷுணவாவ
பிரஸ்தாந பேதம், i. 10

† மஹாபாரதம் வநபர்வம் தீர்த்த யாத்ரா பர்வம் 251-வது அத்தியாயத்தில் 21-வது சுலோகம்:—
வூயஷூஉ-ஸூ-வாகவெஷா:

## புத்தக வரவு.

ஆர்ய மத உபாக்யாநம் இரண்டாம் பாகம்:—இதன் முதல்பாகம் முன்னமேயே வெளிவந்து ஜநங்களால் நன்குமதிக்கப் பெற்று பள்ளிக்கூடங்களில் பரவிக்கொண்டு வருகிறது. பிரகிருத புஸ்தகம் இரண்டாம் பாகம்: இதில் 54 இனிய கதைகள் மூலமாய் அரிய பெரிய ஞான விஷயங்களும், மூன்று ஆசாரியர்களின் சரிதங்களும் இலகுவான தமிழ்நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன. இந்த இரண்டாம் பாகமும் பிரஹ்ம ஸ்ரீ எ. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்களால் இயற்றப்பட்டிருக்கிறது. ஐயாவர்கள் ரிஷிகள் போல, ஞானசாஸ்திர ரஹஸியங்களை யாவரும் அறிந்து, உலக வாழ்வை நலம்படச் செய்துகொள்ளுமாறு, தெளிவாய் இப்புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறார்கள். நாமெல்லோரும் அவர்களுக்கு நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்னும் இத்தகைய புத்தகங்களை ஜநோபகாரார்த்தம் ஐயரவர்கள் பிரஸித்தப்படுத்து வார்களென ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். இதன் விலை அணா. 0—8—0

இது மைலாப்பூர் ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியார் பதிப்பு. சேர்த்தியான கடிதமும், அழகான அக்ஷரமும், கதைகளை ரூபிக்க 14 படங்களும் அமைந்த புத்தகம் இது. முதல்பாகத்தைப் போலவே, இந்த இரண்டாம் பாகத்தையும், பள்ளிக்கூடங்களில் அவசியம் மாணவர்களின் பாடபுஸ்தகமாக ஏற்படுத்தவேண்டியது.

---

கிருதயுகத்தில் மனிதர்கள் குறிப்பிட்ட தர்மங்களுடையவர்களாகவும் ஒரே வேதாநுஷ்டாந முடையவர்களாயும் இருந்தார்கள் என்றும்

(சு-14.) ந ஸாமருக்யஜுர்வேதா:

அக்காலத்தில் ஸாம, ரிக், யஜுஸ் என்று வேதங்கள் மூன்று வகையாய்ப் பிரியவில்லையென்றும்

(சு-28.) விஷ்ணுர்வை பீததாம் யாதி சதுர்தா வேத ஏவ ச

துவாபர யுகத்தில் விஷ்ணுவானவர் மஞ்சள் நிறமானார். வேதங்களும் நான்காய்ப் பிரிந்தன என்றும்

(சு. 31) ஏகவேதஸ்ய சாஜ்ஞாநாத் வேதா:
தே பஹவ: க்ருதா:

ஒரே வேதமானது மனிதர்களின் அறியாமையால் பல வேதங்களாய்ச் செய்யப்பட்டது என்றும் சொல்லப்பட்டிருப்பதைக் கவனிக்க.

சிவப்பிரகாசப் பெருந்திரட்டு (குறுந்திரட்டுடன்):--இதை ஸ்வரூபானந்தஸ்வாமிகள் 600 வருஷங்களுக்குமுன்னர், லோகோபகாரமாகத் தமிழ்பாஷையிலுள்ள வேதாந்த சாஸ்திரங்கள் பலவற்றையும் நன்கு ஆராய்ந்து 2821 செய்யுட்களைத் தொகுத்து, அவைகளை நூலக்கட்டளை என்றும் அநுபவக் கட்டளை என்றும் இரண்டாகவகுத்து, ஞான விஷயங்களை 224 அதிகாரங்களாகப் பிரித்து இதற்கு தம்முடைய குருநாதன் சிவப்பிரகாசஸ்வாமியின் பெயரையிட்டு அருளிச்செய்தார். இதுகாறும் வெளிவாராதது. சாஸ்திர ரூபமாயுள்ளது. இப்புத்தகத்தை ஆராய்ந்து படிக்குங்கால், தமிழில் எத்தனையோ அருமையான ஞானநூற்கள் இருந்திருக்கின்றனவென்றறிகிறோம். திருமந்திரம், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி முதலியவைகளினின்று அநேக பாசுரங்கள் இதன் கண் சேர்க்கப்பட்டுள்ளன. இப்புத்தகம் ஞானக்களஞ்சியமென மதிக்கப்பாலது. முமுக்ஷுக்களுக்கும், மதங்களின் ஸ்வரூபங்களையும், அவற்றின் பேதங்களையும் அறிய விரும்புவோர்க்கும், ஞான முறை பற்றிய உபந்யாஸகர்களுக்கும் முக்யமாய் பிரஹ்மஞான சபையின் அங்கத்தினர்களுக்கும் மிகவும் உபயோகமான நூலாகும். இத்துடன் அ ந் த ந் த அதிகாரத்தின் கீழ் தத்துவராய ஸ்வாமிகள் திரட்டிய குறுந்திரட்டுச் செய்யுட்கள் 1390ம் வெளிவந்திருக்கின்றன. இதின் கண் பெரியார் பாசுரங்கள் 4211 வெளிவந்திருக்கின்றன. இப்புஸ்தகத்தை சென்னை லோகோபகாரி பத்திராதிபர் ஸ்ரீமாந் கோ. வடிவேலு செட்டியார் அவர்களும் மங்கலம் ஸ்ரீமாந் ஷண்முகமுதலியார் அவர்களும் பல ஏட்டுப்பிரதிகளை சேகரித்து பரிசோதனை செய்து ஸ்வரூபானந்த தத்துவராய சுவாமிகளின் சரித்திரங்களுடனேயும் விஷய அட்டவணையுடனேயும், பாட பேதங்களுடனேயும் உயர்ந்த கடிதத்தில் மிகவும் அழகாய் அச்சியற்றி பிரவித்தம் செய்திருக்கிறார்கள். இவர்கள் இதில் எடுத்துக்கொண்டிருக்கும் பிரயாசை மிகவும் பெரிதானது. இப்புத்தகத்தின் பெருமையையும், அருமையையும் உத்தேசிக்க இதன் விலை ரூ 3 மிகவும் குறைந்தது. இப்புத்தகத்தை, சென்னை கோமளேசுவரன் பேட்டை ஸச்சிதாநந்த அச்சியந்திரசாலை சொந்தக்காரர் ஸ்ரீமாந் வடிவேலுசெட்டியார் அவர்களுக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

---

திருமந்திரம் புதுப்பதிப்பு குறிப்புரையுடன்:—தென்னாட்டில் சைவ ஸமயத்தில் பத்தாந் திருமுறை என்று பிரவித்தம் பெற்றதும் திருமூல நாயனார் அருளியதுமான இந்நூல் தமிழ் நாட்டுக்கு மிகவும் சிரேயஸ்ஸை கொடுக்கும் அருமையான நூலாம், முன் அதிக பதிப்புக்களையும், பல ஏட்டுப்

பிரதிகளையும் சில அறிஞர்களைக்கொண்டு நன்கு பரிசோதனை செய்தும் குறிப்புரையுடனேயும் பிரஹ்மஸ்ரீ இரமண சாஸ்திரிகளின் அருமையான சைவஸித்தாந்த விஷயமான நான்முகத்துடனும், மாவை ஸ்ரீமாந் வே. விசுவநாதபிள்ளை அவர்கள் ஸ்ரீமாந் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியார் அவர்களுடையவும், ஸ்ரீமாந் மெ. அரு. அரு. அருணாசலம் செட்டியார் அவர்களுடையவும், பின்னும் சிலருடையவும் பொருளுதவிபெற்று, பிரஸித்தம் செய்திருக்கின்றார்கள். இது சென்னை ரிப்பன் அச்சியந்திரசாலையில் அழகாய்ப் பதிப்பிக்கப்பெற்றிருக்கிறது. இதன் பயின்டிங்கு கட்டடமும் நேர்த்தியாக அமைந்திருக்கிறது. இதுகாறும் திருமந்திரத்திற்கு உரை செய்து ஒருவரும் பிரஸித்தம் செய்தாரில்லை. இதற்கு விரிவாய்ப்பேருரை அநேக ஸம்ஸ்கிருத தமிழ்ப்பண்டிதர்களைக் கொண்டு ஷை விசுவநாதபிள்ளை அவர்கள் எழுதிமுடித்துவைத்திருக்கிறார்சள். அவ்வுரை சொற்ப ஆராய்ச்சியின் மேல் சமீபத்தில் பிரஸித்தமாகும். அதற்கு முன்னதாக, திருமந்திரசுத்த பிரதி ஒன்றை குறிப்புரையுடன் வெளியிடவேண்டுமென அநேகர் விருப்பத்திற்கு இணங்கி ஷைவிசுவநாதபிள்ளை அவர்கள் இப்புத்தகத்தை வெளியிட்டிருக்கின்றார். இவர்கள் திருமந்திரத்தின் விஷயமாக 20வருஷங்களாக விடாமுயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதன்பயனாய் பிரகிருத பதிப்பு அழகாய் அமைந்துள்ளது. நம் சென்னை ராஜதானியில் ஐக்கோர்ட்டு நியாயாதிபதியாக விருந்து இப்போது பென்ஷன் பெற்றவரும், உயர்ந்த சிலரும் பிரஹ்மக்ஞாந சபையின் சமீபகாலத்தில் வைஸ்பிரஸிடெண்டாக இருந்தவரும், ஜநஸமூஹத்தின் க்ஷேமத்தின் பொருட்டு தம்முடைய இளைப்பாறும் காலத்தையும் பொருளையும் தங்குதடையில்லாமல் உபகரித்துக்கொண்டுவருகிறவருமான டாக்டர் ஸர் எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்களுக்கு (Dr. Sir S. Subrahmanya Aiyar Avl.) இப்புத்தகத்தை ஸமர்ப்பித்திருக்கிறார். இது மிகவும் பொருத்தமானது. இந்நூல் வேதாந்த ஸித்தாந்தஸமரஸ ஞாநத்தை உபதேசிக்கும் நூலாம். ஜநங்களுக்கு எல்லாமதங்களுள்ளும் உண்மையில் மாறுபடும் கருத்தில்லை என்று வற்புறுத்தி உபதேசிக்கும பிரஹ்மக்ஞாந சபையின் உதவியச்கிராஸநாதிபதியாய் இருந்தமையால், இந்நூலை அவர்களுக்கு ஸமர்ப்பித்து அவர்கள் முகமாய்வெளியிடல்மிகவும் நியாயமே. இதன் விலை ரூபா 3—8—0. இதைச்சென்னை ரிப்பன்பிரஸில் வேண்டுவோர் பெற்றுக்கொள்ளலாம். பிரஹ்மக்ஞாந சபையில் தமிழறிந்தவர்கள் ஒவ்வொருவரும், தமக்குற்ற ஞாநநூலாக அபிமானிக்கத்தக்கது.

மறந்துபோன சில ஆரியமத உண்மைகள்:-இது மகா-ா-ாஸ்ரீ ஊடி J. ஸ்ரீநிவாஸராயரவர்களால் ஆங்கிலத்திலியற்றப்பட்டது. இது தமிழில் யாவருக்கும் பயன்படும்படியாய்க் கோயம்புத்தூர் தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை

யவர்களால் இலகுவான நடையில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இச்சிறு புஸ்தகத்தின் கண் பிரஹ்மக்ஞாந தர்சநத்தின் அநேக உண்மைகள் ஆர்யமத சாஸ்திரங்களில் புதைந்து மறைந்திருக்கின்றன வெனத் தெரிய வருகிறது. இது மிகவும் உபயோகமான நூல். முக்யமாய் ஆங்கிலந்தெரியாதவர்களுக்கு இப்புஸ்தகம் மிகவும் பயன்படக் கூடியது. இதன் விலை அணா 4. கோயம்புத்தூர் அச்சியந்திரசாலை மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்திய ஸ்திரீ ரத்நங்கள்:—மாதர் மநோரஞ்ஜநீ பத்ராசிரியரான மகா-ா-ா-ஸ்ரீ C. S. ராமஸ்வாமி ஐயரவர்கள் ஆங்கிலத்தில் மந்மதநாத்தத்தர் என்பார் செய்துள்ள "Heroines of Ind" என்ற புஸ்தகத்தை எளிய தமிழில் மொழி பெயர்த்துள்ளார். அநேக சித்திரப் படங்கள் இதன் கண் அமைக்கப்பட்டுள்ளன. எல்லாச் சரித்திரங்களும் அழகாய் வரையப்பட்டிருக்கின்றன. அதிலும் அஹல்யாபாய் என்பவரின் சரித்திரமே உயர்வானது. இப்புஸ்தகத்தை நம் தேசத்து ஒவ்வொரு ஸ்திரீயும் வாசித்து அந்தஸ்திரீ ரத்நங்களின் நற்குணங்களைத் தம்மில் பிரகாசிக்கும்படி செய்து கொள்வார்களென்று நம்புகிறோம். புஸ்தகத்தின் விலை அணா 8. திருவல்லிக்கேணி மாதர் மநோரஞ்ஜநீ ஆபீஸ் மானேஜரிடமிருந்து இதைப் பெற்றுக் கொள்ளலாம்.

---

## சமாசாரம்.

---

**கநந்தங்கிய இராஜப்பிரதிநிதியவர்களுக்கு நேர்ந்த விபத்து:—** சென்றமீ 23உ டில்லிமாநகரத்தில் மகாகநந்தங்கிய வைஸ்ராய் அவர்கள் ஸகல பிருதுகளுடன் யானைகள், குதிரைகள் முதலானவைகளுடனும் யுத்தவீரர்களுடனும் டில்லிமாநகரத்திற் பிரவேசித்து ஊர்கோலமாய்ப் போய்க்கொண்டிருக்கும் சமயத்தில் ஒரு பாதகன் ஒரு வீட்டின் மாடியினின்று பாம் என்ற நவீந எரி பாணத்தை வைஸ்ராய் அவர்களும் அவர்கள் பத்நியாரும் ஏறியிருந்த யானையின்மேல் போட்டான். அந்த குண்டு வெடித்து வைஸ்ராய் அவர்களுக்குப் புறம்பாயிருந்த ஸேவகனைத் தாக்கி அவனும் மாண்டான். வைஸராய் அவர்களும் அவரது பத்நியாரும் ஈசுவரகிருபையால் உயிர் தப்பினார்கள். ஆனால் வெடித்த குண்டின் சில இரும்புத் துண்டுகள் வைஸ்ராய் அவர்களின் கழுத்து முதலான இடங்களில் பிரவேசித்தன. குண்டு வெடித்த வேகத்தினால் சற்றுநேரம் வைஸ்ராய் அவர்கள் ஸ்மரணையில்லாமலிருந்தார்கள். பின்பு வைஸ்ராய் அவர்களும் அவரது பத்நியாரும் அம்பாரியைவிட்டுக் கீழிறங்கி அவருடைய அரண்மனைக்கு மோட்

டார் வண்டியின் மூலமாய்ப்போனார்கள். வைஸ்ராய் அவர்களின் சரீரத்திற்குட் புகுந்த இருப்பு ஆணிகள் ராஞ்ஜன்ஸ்ரேஸ் என்ற மறைந்த வஸ்துகளின் படத்தை எடுக்கக்கூடிய யந்திரத்தினால் அவ் ஆணிகள் இருக்கிற இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வெளியெடுக்கப்பட்டன. ரணவைத்தியம் செய்யப்பட்டுவருகிறது. சில சமயத்தில் ஜ்வரம் வருகிறதும் சில சமயத்தில் சௌக்கியமாயிருப்பதாகவும் தந்திகளின் மூலமாய்த்தெரியவருகிறது. இன்னும் பூர்ணஸௌக்கியம் அடைந்தாரில்லை. ஈசுவர கிருபையாலும் நம் தேசத்தைப் பாதுகாக்கும் மஹரிஷிகளின் அநுக்கிரஹத்தாலும் வைஸ்ராய் அவர்கள் பூர்ண தேக ஸௌக்யம் பெற்று யதாப்பிரகாரம் இராஜாங்க விஷயத்தைச் சீக்கிரம் நடத்திவரும்படியாக அநுகூலம் பெறுவாரென்று எதிர்பார்க்கிறோம். கொலைசெய்த பாதகன் இன்னான் என்று இன்னும் கண்டுபிடித்தார்களில்லை. இக்கொடுமையான ஸம்பவம் பட்டப்பகலில் 11 மணிக்கு நடந்தது. பாதகனை இதுவரை கண்டுபிடிக்கக்கூடாமலிருத்தல் மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. இராஜபிரதிநிதியான லார்ட் ஹார்டின்ஜ் பிரபு அவர்கள் நம் தேசத்தை இதுகாறும் ஆண்டுவந்த இராஜ பிரதிநிதிகளில் மிகவும் உயர்நலமமைந்த சிரேஷ்டர். இவர்கள் 2 வருஷமாய் அரசாட்சியை வகித்து நடத்திக்கொண்டுவருகையில் ஜனங்களின் துக்கங்களையும் குறைகளையும் தீர்க்கமாய் விசாரித்து அவைகளைத் தடைத்து நிவிர்த்திசெய்து ஜனங்களின் க்ஷேமத்தையே தனது இலக்ஷ்யமாகக் கொண்டு நடத்தி வருகிறார்கள். இந்தப் பிரபுவுக்குத் தீங்கைநினைத்து அதைச் செய்யத்துணிந்த ஒரு பாதகனும் நம் தேசத்தில் இருந்திருக்கிறான் என நினைக்க மநம் வருந்துகிறது.

வைஸ்ராய் அவர்கள் விபத்தினின்று தப்பித்தநி னிமித்தமாக அநுதாப தந்திகள் சுமார் 2000த்திற்கு மேல் வந்திருக்கின்றனவாம். இன்னும் வந்துகொண்டு மிருக்கின்றனவாம்.

---

மார்கழி மாசத்திய உற்சவங்கள் சபைகள் முதலியன:—மாதங்களுக்குள் உயர்வான மாதம் மார்கழியென பகவான் கிருஷ்ணன் கீதையில் உபதேசம் செய்திருக்கின்றார். அவர் உபதேசித்த காலத்தில் அம்மாதத்தின் மஹிமைக்குக் காரணங்கள் பல இருந்திருக்கலாம். இக்காலத்தில் அம்மாதத்தின் மஹிமையைப் பிரகாசப்படுத்த நவீநமான காரணம் ஒன்று உண்டு. அதாவது,ஒவ்வொரு டிசம்பர் மாசத்திலும் சென்ற வருஷ முடிவு காலத்தில் அவ்வருஷத்தில் நம் தேசத்தின் பல நாடுகளில் ஜநஸமூஹத்தினுடைய யோக க்ஷேமத்தின் பொருட்டு பல துறைகளில் ஆங்காங்கு அறிஞர்களால் தனித்தும் ஒருங்கு சேர்ந்தும் நடத்தப்பெற்ற நன் முயற்சிகளையும், அவைகளின் பலன்களையும்பற்றிய வரலாறுகளை விமர்சநம்செய்வதற்காகவும் உயர்

தலைமையைந்த ஸபைகள் கூடுதலே மேற்கூறிய மாதத்தின் பெருமையைப் பிரகாசப் படுத்துவதற்கு முக்கிய காரணம், என அறிஞர் மதிக்கலாம்.

---

ஆதியாற்றின் பிரஹ்மக்ஞாந சபையின் கூட்டம்:—இச்சபைகளில் வயதுக்கிரமத்திலும் ஞாந முறையிலும் உயர்வு பெற்றுத் தலைமையாக இருப்பது பிரஹ்மக்ஞானஸபையாம். அஃது ஆதியாற்றில் சென்றடிஸம்பர் மாதம் 26உ முதல், 31உ முடிய கூடியது. ஸபையின் அங்கத்தினர் 700 பேருக்குமேல் நம் தேசத்தின் பலதிக்குகளிலிருந்தும் பிறதேசங்களிலிருந்தும் பலர் வந்திருந்தார்கள். வடக்கே காஷ்மீரத்தினின்றும், கிழக்கில் வங்காளம் பர்மாமுதலிய தேசங்களினின்றும்; தெற்கே கன்னியாகுமரியினின்றும், மேற்கேபம்பாயிலிருந்தும் பல மதஸ்தர்கள் சைவர்கள் வைஷ்ணவர்கள் முதலிய உள்வகுப்புக்களடங்கிய பல ஹிந்து சமயிகள்; ஜோராஸ்தர் மதத்தினர்பௌத்தமதத்தினர், இஸ்லாம்மதத்தினர், சிக்கு மதத்தினர் பல வகுப்பான கிறீஸ்து மதத்தினர்; ஜயிந மதத்தினர் ஒரே ஸபையில்கூடினார்கள். பிரஹ்மக்ஞாநஸபா மண்டபத்திலும், விசாலமாய்ப் பரவியிருக்கின்ற ஆலவிருக்ஷத்தின் அடியிலும், பல உபந்யாஸங்கள் மாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையாரின் தலைமையின் கீழ் நடத்தப் பெற்றன. உபந்யாஸக் கிரமங்களை சென்ற டிஸம்பர்மீ பத்திரிகையிலேயே பிரஸித்தம் செய்துள்ளோம். பலவாறுன மதத்தினர்களும், சமயிகளும் கூடினாலும் மதத்வேஷம் கொஞ்சமேனும் ஒருவரும் பாராட்டினாரில்லை. எல்லோரும் ஒருவரோடொருவர் அந்யோந்யமாய் அன்புடன் உறவாடினார்கள். இது ஒரு ஆச்சர்யமான விஷயம். ஈசுவரன் ஒருவர் இருக்கிறார் என்றும், உலகத்திலுள்ள மனிதர்களெல்லாம் அவருடைய அம்சர்களான புத்திரர்களென்றும், அதனால் ஜநஸமூஹம் முழுமையும் ஒரேகுல மென்றும், கூடின அங்கத்தினர்களெல்லாம் கருதி ஒழுகுவாராயினர். பெரிய ஸபைக் கூட்டங்களைத்தவிர ஆலமரங்களின் அடியில் ஆங்கிலந் தெரியாத தமிழர்களுக்கும், தெலுங்கர்களுக்கும் பிரத்தியேகமான ஸபைகள் கூடின. அவைகளின் கண் அந்தந்த பாஷையில், மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையார் செய்த உபந்யாஸங்களைச் சுருக்கமாய்த் தெரிவித்ததும் தவிர, ஞாந விஷய சம்பந்தமான வேறு உபந்யாஸங்களும் செய்யப்பட்டன, எல்லா விஷயங்களும் நிர்விக்நமாயும் நன்றாயும் மஹாத்மாக்களின் அருளினால் நடை பெற்றன.

---

காங்கிரஸ் மஹாஸபை:—புதிதாய்ஏற்படுத்தப்பட்ட பேகார் ராஜதானியின் பிரதாந நகராகிய பாங்கிப்பூரில் இவ்வருஷம் டிஸம்பர் மாதத்தில்

இந்தியாதேசம் முழுவதும் ராஜாங்க முறையில் ஆங்கில ராஜாங்கத்திற்குட்பட்டு சுதந்தரம் பெறவேண்டுமென முன்னேற்கமுள்ளதாய் இந்த மஹாஜந சபை கூடிற்று. சென்ற பல வருஷங்களாக நடத்தப்பட்டு வருகிற நம் தேசத்தில் பலவிடங்களிலுள்ள அறிஞர்களான தேசாபிமானிகள் 200 பேருக்கு மேலாக பாங்கிபூர் என்ற நகரத்தில் கூடினார்கள். முன் பாடலிபுரம் என்று நம்தேச புராணங்களில் கூறப்பட்டுள்ள நகரே இப்போது பாங்கிபூர் என்ற திருநாமம் பெற்றுள்ளது. ராஜாங்க முறையில் சீர்திருத்தங்களைப் பற்றியும் ஜநங்களின் வேண்டுகோள்களைப் பற்றியும் விஸ்தாரமான ஆராய்ச்சி நிகழ்ந்து அவைகளைப்பற்றிய தீர்மானங்கள் ஏற்படுத்தப்பட்டன. இம்மஹாஜநஸபை மிகவும் விமர்சையாக நடந்ததென ஆங்கிலப்பத்திரிகைகள் மூலமாய்த் தெரியவருகிறது. இந்த வருஷம் இச்சபை கராச்சி பட்டணத்தில் கூடும்.

அதே இடத்தில் இந்தியா தேசத்தின் கைத்தொழில் அபிவிருத்தி முறை விஷயமாகவும், ஹிந்துக்களின் ஆசார சீர்திருத்தத்தின் விஷயமாகவும் ஸபைகள்கூடி பல உபந்யாஸங்கள் அச்சபைகளில் நிகழ்ந்தன.

---

தஞ்சாவூர் ஜில்லா திருவையார் என்ற பஞ்சநத க்ஷேத்திரத்தில் பரிஷத்:—சென்ற டிசம்பர்மீ 25வ முதல் 10 நாள் மஹாஸபை கூடிற்று. பல தேசங்களின் பல ஊர்களிலிருந்து பல வித்வாங்கள் சுமார் நூற்றைம்பதுபேர் கூடினார்கள். தர்ம சாஸ்திரத்திலும், பூர்வ மீமாம்ஸையிலும் பரீக்ஷைகள் நிகழ்ந்தன. அவைகளில் தேறினவர்களை இருவகுப்பாக ஏற்பாடு செய்தார்கள். முதல் வகுப்பார்களுக்கு தனித்தனி 50ரூ யும் இரண்டாம் வகுப்பார்களுக்கு தனித்தனி 35ரூ ஸம்பாவனை அளித்தார்கள். தவிரவும் சில விஷயங்களைப்பற்றி வியாஸம் எழுதிவந்தவர்களுக்குப் பிரத்தியேகமாக உயர்ந்த ஸம்பாவனைகள் அளிக்கப்பட்டன. பரிஷத்கூடிய முக்கியமான விஷயங்களாவன, ப்ரௌடையான ஸ்திரீக்கு விவாஹம் செய்தல், அந்நிய நாடுகளுக்குக் கப்பலில் யாத்திரை செய்தல், ஹிந்துமதத்தை விட்டு வேறு மதத்தில் சேர்ந்தவர்கள் திரும்பவும் ஹிந்து மதத்திற்கு வரவேண்டுமென உண்மையான அநுதாபத்துடன் பிரியப்படுவார்களாகில் அவர்களைத் திரும்பவும் ஹிந்து மதத்தில் சேர்த்துக்கொள்ளுதல், ஹிந்துக்களுடைய விவாகங்களில் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் பணம் வாங்கும் அநீதியைத் தவிர்த்தல் இவைபோன்ற விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி ரூபமான பல வாதங்கள் ஏற்பட்டன. அவ்வவர்களுடைய அபிப்பிராயத்திற்கு அநுஸரணையாய் வித்வாங்கள் தர்ம சாஸ்திர ஆதாரங்களை எடுத்துக்காட்டினார்கள். மேற்கண்ட விஷயங்களைப்பற்றி எழுத்து மூலமாகத் தங்கள் அபிப்பிராயங்களை

எழுதிக்கொடுத்தார்கள். ஷை விஷயங்களைப்பற்றி ஜநங்களைக் கட்டுப்படுத்தும்படியான ஒரு விதமான தீர்மானமும் செய்யப்படவில்லை. அவ்வித உத்தேசத்தையும் பரிஷத் ஏற்படுத்தியவர்கள் கொள்ளவில்லை. ஆனால் சிலர் அக்கிரமமாகப் பரிஷத் நோக்கங்களை விபரீதமாக பிரஸ்தாபித்தார்கள். தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள அநேக வித்வாங்களை வராமலும் தடுத்தார்கள். பல இடங்களிலிருந்து பலவித ஆசாரங்களோடு கூடிய பிராஹ்மணர்கள் கூடினாலும் எல்லாருக்கும் போஜநம் முதலிய சௌகரியங்கள் ஒழுங்காய் நடத்தப்பட்டன. மேற்படி பரிஷத்தை மகா-ா-ா-ஸ்ரீ திவான் V. P. மாதவராவ் அவர்களும், ரிடையர்டு டிப்டி கலெக்டர் R. சாமிநாத ஐயரவர்களும் அதிக சிரத்தைஎடுத்துக்கொண்டு நடத்தினார்கள்.

---

**காஞ்சீபுரத்தில் சைவசித்தாந்தமஹாஸமாஜம்:**—ஸ்ரீமாந் பொன்னம்பலம்பிள்ளை அவர்களின் அக்கிராஸநத்தின் கீழ் நடை பெற்றது. அநேக வித்வாக்கள் சைவசம்பந்தமாகப் பல உபந்யாஸங்கள் செய்தார்கள்.

---

உலகத்தில் பிரெஞ்சு பாஷை பேசுகிறவர்கள் $4\frac{1}{2}$ கோடி ஜநங்கள், ஜெர்மன் பாஷை பேசுகிறவர்கள் 8 கோடி ஜநங்கள். ஆங்கில பாஷை பேசுகிறவர்கள் 16 கோடி ஜநங்கள். தமிழ்ப் பாஷை பேசுகிறவர்கள் $2\frac{1}{2}$ கோடி ஜநஙகள். தெலுங்கு பாஷை பேசுகிறவர்கள் 3 கோடி. வங்கபாஷை பேசுகிறவர்கள் $4\frac{1}{2}$ கோடி ஜநங்கள்.

---

**மின் சாரசக்தியால் தூங்கப்பண்ணுதல்:**—ஒரு ஜர்மன் வைத்தியர் முயல்களையும் நாய்களையும் மின்சார சக்தியை (Electricity) அவற்றின் மூளையில் புகவிடுதலினால் தூக்கத்தை உண்டுபண்ணுகிறார். அப்படிச் செய்வதில் யாதொரு அபாயமுமில்லையாம். அநேக மனிதர்கள் தூக்கமில்லாமல் வருந்துகிறார்கள். அவர்களுக்கு இத்தகைய மின்சார சக்தியைப் பிரயோகம் பண்ணுவதால் தூக்கத்தை உண்டுபண்ணக் கூடுமென்று மேற்கூறியவர் வற்புறுத்திச் சொல்லுகிறார்.

---

இப்பூமியில் பிராணிகளின் விகாஸ முறையில் (Evolution of Animals) மனிதன் 4 லக்ஷக் வருஷங்களுக்கு முன்னர் தோன்றினான் என்று ஒரு பிரா்ன்சு தேசத்து அறிஞரும், 30 லக்ஷம் வருஷங்களுக்கு முன்னர் தோன்றினான் என்று அத்தேசத்து வேறு ஒரு அறிஞரும், சொல்லுகிறார்கள். பிரஹ்மஜ்ஞாந தர்சநத்தின் புத்தகங்களின்படி 1 கோடியே 80 லக்ஷம் வருஷத்திற்கு முன்னர் மனிதவர்க்கம் உண்டாயிருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

ஆகாசத்தின் மேற்பரப்பை முழுமையையும் விவரமாய் சித்திரித்து எழுதி வைக்க பிரான்சு தேசத்து வானசாஸ்திரிகள் 25 வருஷங்களாக முயற்சித்து வேலைசெய்து வருகின்றார்கள். இது முடிவு பெறுதலுக்கு இன்னும் 25 வருஷங்கள் செல்லுமாம். இதன் பிரயோஜநம் என்ன வென்றால் ஆகாசத்திலுள்ள நக்ஷத்திரங்கள் (Stars) கிரஹங்கள் (Planets) ஆவி கோளங்கள் (Nebula) இவைகளின் ஸ்தானங்கள் குறிக்கப்படுமாகில், பின் ஒருகாலத்தில் அவைகளின் ஸ்தான பேதம் ஏற்படுதல், புதிய நக்ஷத்திரங்கள் முதலியவை தோன்றுதல், முதலிய ஸம்பவங்களைச் சந்தேகமின்றி அறிதல் கூடும். இந்த வேலையில் பலவிடங்களிலுள்ள நக்ஷத்திர மண்டபங்களின் (Star-observatories) வான சாஸ்திரிகள் உத்ஸாஹத்துடன் விடாமுயர்சியாய் வேலை பார்த்து வருகின்றார்கள். விண்மீன்களும் கூட எண்ணிக்கைக்குள் வரும் போல் தோன்றுகின்றன. இத்தொழிலில் ஆயிரக்கணக்காகப் பணம் செலவு செய்யப்பட்டு வருகின்றது.

---

இந்தியாவில் தர்மங்கள் வரவரக் குறைவுபட்டு வருகின்றன:—The Vedic Magazine என்னும் பத்திரிகையில் இவ்விஷயத்தைப்பற்றி விஸ்தாரமான ஒரு வியாசம் வெளிவந்திருக்கிறது. ஸ்ரீமத் இராமாயண காலத்தில் பிராஹ்மண தர்மம் (அஹிம்ஸை, தியாகம், தபஸ், வாய்மை முதலிய தெய்வ சம்பத்துகள்) பிரகாசித்தது. மஹரிஷிகளான வஸிஷ்டர், விச்வாமித்திரர் முதலியவர்கள் தேசத்தின் இராஜ்யபாரத்தை நேர்மையாக நடத்தி வந்தார்கள். ஸ்ரீராமபிரான் லங்கையை ஜயித்தாராயினும், அதைத் தம் ராஜ்யத்துடன் சேர்க்காமல், அதை இராவணனின் சகோதரன் விபீஷணனுக்குக் கொடுத்து விட்டார். பின்பு மஹாபாரத காலத்தில், பிராஹ்மண தர்மம் பொய்த்துப் போயிற்று, க்ஷத்திரிய தர்மம் மேலெழும்பிற்று. அதுவும் உயர் நலமில்லாமல் போலி தர்மமாக நடைபெற்றது. டம்பம், கர்வம், மமதை, அந்ய தேசத்தைக் கைப்பற்ற வேண்டுமென்ற ஆசை, பிறரைக் கீழ்படுத்த வேண்டுமென்ற ஆக்கிரகம் இவைபோன்ற ஆஸுர ஸம்பத்துக்கள் அதிகமாக பரவின. அவைகளின் பயனாய், பரோபகார சிந்தை குன்றியது. சத்தியமும் தபஸும் மறைந்தன. பொது ஜனங்களின் சீலம் கெட்டது. பேராசைகளும், கலகங்களும், போராட்டங்களும் மலிந்தன. ஜந ஸமூஹத்திற்கு

சாந்தமும் ஸாவதாநமும் போய்விட்டன. தடி எடுத்தவன் தண்டல்காரனாகி விட்டான். கண்டதே காக்ஷி கொண்டதே கோலம் என ஜநங்கள் மதிக்கலாயினர். லோகாயதமதம் பரவ ஆரம்பித்தது. இந்தக் காலத்திற்குப் பின்னர் இந்தியா தேசம் மேல் நிலைக்கு வரவில்லை. பின்பு போலி வைச்ய தர்மம், பின்பு போலி சூத்திர தர்மம் ஒன்றின்பின் ஒன்றாய் பிரசாரத்திற்கு வரவே, இத்தேசம் பிறர் நிந்திக்கவும் எளனம் செய்யும்படியான சீர்கேடான பிரகிருத நிலைமையில் இருக்கின்றது.

---

டெல்லிபோன் (Telephone) இயந்திரத்தின் நூதந உபயோகம்:— இந்த இயந்திரத்தால், சமாசாரங்கள் பேசிக்கொள்ளுவதை நாம் அறிவோம். ஒரு தாயார் தன் குழந்தையை விட்டு வேறு இடத்திற்குப் போயிருந்தாள். அப்போது, குழந்தை அழுதது. அதை அங்கிருந்த வேலைக்காரி, தாயாருக்கு டெல்லிபோன் மூலம் தெரிவித்தாள். தாயார் குழந்தையின் காதின் அருகாண்மையில், டெல்லிபோனை வைக்கும்படி திரும்பத் தெரிவித்தாள். உடனே டெல்லிபோன் மூலமாய் தாயார் ஒரு தாலாட்டு பாட்டை பாடி அக்குழந்தையைத் தூங்கும்படி செய்தாள். பின் தான் போன காரியத்தை முடித்துக் கொண்டு தன் வீட்டுக்குத் திரும்பினாள். அதுவரை அக்குழந்தை நன்றாய்த் தூங்கியது.

---

ஸமீபத்தில் பூனைகளின் கண்காட்சி ஒன்று நடந்ததாம். பல வர்ணமுள்ள பூனைகளும் பல பருமன் உள்ள பூனைகளும் அதிற் காட்டப்பட்டன. அதில் ஒரு பெரும் பூனை சுத்த சிவப்பு நிறமுள்ளதாகவிருந்தது. அதில் அந்தப் பூனை ரூ 15000 விலை மதிக்கப்பெற்றது.

பத்திராதிபர்.

---

433

## பட்டு பீதாம்பர சம்பெனி.

திருப்தியில்லாததைத் திரும்பப் பெற்றுக்கோள்ளலாம். } **ஸ்ரீ காசி** { பட்டு பீதாம்பரக் காட்லாக் இனமாக அனுப்பப்படும்.

### உருத்திராக்ஷங்கள் ஜபமாலைகள் பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6அணு முதல் ரூபா 12 வரை. விலை அதிகப் படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6முகக்கண்டிகள் 33உள்ளது, கண்டி 1க்கு ரூபா 1முதல் 10 வரை: 5 முகக்கண்டி 32 உள்ளது; கண்டி 1க்கு அணு 10 முதல் ரூபா 10வரை. விலை அதிகப்படுவதுபோல், மணிகள் பெரிதாக இருக்கும். சம்மதமில்லாதவை திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்,

### காசி வயிரவர் கயிறு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல் நெம்பர் 100-க்கு | ... | ... | 3 | 0 | 0 |
| 2-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 2 | 8 | 0 |
| 3-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 6 | 0 | 0 |

### குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு குடம், கரண்டிமுதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறுசெட்டு 1-க்கு ரூபா 2, பெரிய செட்டு 1-க்கு ரூபா 4.

வெண்பட்டு வேஷ்டிகள்:—சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள், கோயம்புத்தூர் வேஷ்டிகள் மாதிரி சன்னக்கம்பி, ருத்திராக்ஷக்கம்பி ஜரிகைக் கம்பி போட்டவை.

| முழம். | அகலம். | ரூ. முதல். | | வரை. | முழம். | அகலம். | ரூ. முதல். | | வரை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2½ | 7 | ,, | 9 | 8 | 3 | 12 | ,, | 18 |
| 6 | 3 | 10 | ,, | 12 | 9 | 3 | 14 | ,, | 20 |
| 7 | 2½ | 8 | ,, | 12 | 10 | 3 | 15 | ,, | 22 |
| 7 | 3 | 10 | ,, | 14 | | | | | |

விலாசம்: மானேஜர் பட்டுபீதாம்பர கம்பெனி, காசி

**Benares City.**

## பெண் கல்வி.

### சித்திர சகிதமான ஒரு மாசாந்த சஞ்சிகை.

இப்பத்திரிகை ஸ்திரீகளின் நிலைமையை உயர்த்துவதற்காகவே தோன்றிய ஒன்றாகும். இதில் ஸ்திரீகள், தாய், மனைவி, சகோதரி, புத்திரி முதலிய பல நிலைகளில் செய்யவேண்டிய கடமைகளும் குடும்ப நிர்வாக சாஸ்திரம், வைத்தியவிஷயம், சுகாதாரவிஷயம் இவைகளைப்பற்றிய விஷயங்களும், ஒழுக்கம், குணம், கல்வி முதலியவற்றில் கீர்த்தியடைந்துள்ள தற்கால முற்கால மாதர்களின் சரித்திரங்களும் இனிய தமிழில் வெளியிடப்படும்.

இதற்கு விஷயங்கள் எழுதுபவர் முக்கியமாய் ஸ்திரீகளேயாவர்.

☞ இப்பத்திரிகை ஒவ்வொரு குடும்ப ஸ்திரீயும், வாத்திச்சிமார்களாகப் பயிற்சிபெறும் ஒவ்வொரு ஸ்திரீயும் படிக்கவேண்டியது அவசியம்.

வருஷசந்தா ரூ 2—8—0. தனிப்பிரதி 0-4-0. மாதிரிப்பிரதி வேண்டுவோர் ஒரு அணு லேபில் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

சகோதரி ரேவு தாயாரம்மா, பத்திராதிபர், பெண்கல்வி, சென்னை.

பல கண்காட்சிகளில்
மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

# பி. சுப்பறாய், ஆயுர்வேத ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேச பெருமாள்கோவில் சன்னிதி, தஞ்சாவூர்.

தயவு செய்து
இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்

——

## பி. சுப்பறாயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

**சர்பத்துகள்:**—திராக்ஷப்பழம், நன்னாரிவேர், ரோஜா புஷ்பம், வாழைப்பழம், எலுமிச்சம்பழம், மாதளைப்பழம், கிச்சிலிப்பழம், பாதம், அன்னாசிப்பழம், நாரஞ்சிப்பழம், கொமட்டிப்பழம், சீமை இலந்தைப்பழம், தாமரைபுஷ்பம், இஞ்சி சர்பத்துகள், ஷ சர்பத்துகள் பழவகைகளின் சத்துக்களால் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றையும் துளிகள் கணக்காகவே உபயோகிக்க வேண்டும். ஒரு சேர் குளிர்ந்த ஜலத்திலாவது, சோடாவாடரிலாவது, சுமார் 5 துளிகள் சேர்த்தால் மிகவும் இனிப்பாகவும், எந்த பழ சர்பத்து உபயோகிக்கப் பட்டதோ, அந்தப் பழத்தின் மதுரமான வாசனையோடு கூடிய சர்பத்தாகும். ½ அவுன்சு சீசாக்களில் விற்கப்படும். இச்சிறு சீசாவிலுள்ள சர்பத்து 50 சேர் குளிர்ந்த ஜலத்துடனாவது சோடா வாட்டரோடாவது சேர்த்தால் 50 சேர் உசிதமான சர்பத்தாகும். அரை அவுன்சுள்ள சீசா 1-க்கு விலை அணா 8. வி. பி. செலவுகள் 1 முதல் 3 சீசாக்கள் வரையில் 5அணா பிரத்தியேகம்.

**பிரஹத் சந்திரோதய மகரத்வஜம்:**—தாது நஷ்டம், பல ஹீனம், புருஷத்தன்மையில்லாமை, இந்திரிய நஷ்டம், புத்தி பிரமை, மறதி, முதலிய பற்பல ரோகங்களை வேருடன் கொன்று, அபரிமிதமான புருஷத்தன்மையைத்தரும், சந்தேகமில்லை. இம்மருந்து சாப்பிடத்தொடங்கின நாள் முதல், நாளுக்கு நாள் இதன் சிறந்த குணத்தைக் காட்டும். பாலியத்தில் சிற்றின்பத்தில் நுழைந்து பரிதவிப்போர்கள் இம்மருந்து சாப்பிட்டு வந்தால் வெகு சீக்கிரம் பலத்தை திரும்பப் பெறலாம் என்பது நிச்சயம். எழு வேளை ஔஷதம் ரூபா 3, வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

---

என்னுடைய அவுஷத சாலையின்ஹெட் ஆபீசை பாங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய் விட்டபடியால், இனி எல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக் கோருகிறேன். பாங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.